Registered at the G. P. O. as a Newspaper — வாரப் பதிப்பு — விலை சதம் 15

# ஈழநாடு

National Tamil Daily — தேசிய தினசரி

மலர் 8 — யாழ்ப்பாணம் — சோபகிருது மாசி 18ஆம் நாள் — ஷவ்வால் பிறை 15 — (1-3-64) — ஞாயிற்றுக்கிழமை — இதழ் 20

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6.50 |
| 3 மாதம் | 13-00 | 3.25 |

சீன - இந்திய பிரச்னை ★ ஆசிய - ஆபிரிக்க மண்டலசார்பற்ற மகாநாடுகள் ★ அணு ஆயுத தடை ★ சீன - இலங்கை நல்லுறவு

# ஈழ - சீன பிரதமர்கள் வெளியிட்ட அறிக்கை

## சூ என்-லாயும் கோஷ்டியினரும் தாயகம் திரும்பினர்

கொழும்பு ஞாயிறு

சீன—இந்திய எல்லைத்தகராற்றை சமாதானமாகத் தீர்த்துவைக்கும் பொருட்டு கொழும்பு மகாநாட்டு யோசனைகளின் அடிப்படையில் இந்தியாவுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த சீனா தயாராக இருப்பதாக சீனப்பிரதமரும், இலங்கைப் பிரதமரும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ஆசிய—ஆபிரிக்க மகாநாடொன்றை கூட்டுவதற்கு தக்க நேரம் இதுதானென்றும் இதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் சீனப்பிரதமர் தெரிவித்தார்.

மண்டல சார்பற்ற நாடுகளின் மகாநாட்டை இரண்டாவது முறையாகக் கூட்டுவதில் இலங்கை கொண்டிருக்கும் பங்குபற்றி இலங்கைப் பிரதமர், சீனப் பிரதமருக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாயும், இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் இரு தினங்களாக நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நேற்று இரவு பத்துமணியளவில் இரு பிரதமர்களும் கூட்டறிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

சீனப் பிரதமரும் அவரது கோஷ்டியினரும் நேற்று இரவு 11-30 மணியளவில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பினர். ஒரு விமானத்தில் திரு. சூ என்-லாயும், உப தலைவி சிங்-சுங்-லிங் அம்மையாரும், மற்ற விமானத்தில் உதவிப் பிரதமர் சென்யியும் கோஷ்டியினரும் சென்றனர். விமான நிலையத்தில் பல பிரமுகர்கள் இவர்களை வழியனுப்பி வைத்தனர். பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களுடன் கூடவந்து குதூகலமாக வழியனுப்பி வைத்தார். இந்திய ஹைகமிஷனர் திரு. கபூர் உட்பட வெளிநாட்டு ஸ்தானிகர்களும் விமான நிலயத்துக்கு வந்திருந்தனர். கொழும்பிலிருந்து இரத்மலானை விமான நிலயம் வரையும் பலத்த பொலிஸ் காவல் வைக்கப்பட்டது. சீனப் பிரதமரினதும், கோஷ்டியினரதும் இரு விமானங்கள் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தன.

இரு பிரதமர்களும் கைச்சாத்திட்டு வெளியிட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:

### சீன இந்திய பிரச்னை

சீன இந்திய எல்லைகளில் நிலைமை சீரடைந்துள்ளதில் இரு பிரதமர்களும் திருப்தி தெரிவித்தனர். இந்தியாவுக்கும், சீனாவுக்குமிடையில் சமாதானத்தை உண்டுபண்ணும் முயற்சியில் ஈடுபட்டமைக்காக இலங்கைக்கும் மற்றும் கொழும்பு மகாநாட்டு நாடுகளுக்கும் சீனப்பிரதமர் நன்றி தெரிவித்தார். இந்திய சீன நல்லு

(10-ம் பக்கம் பார்க்க)

## மாற்றமில்லை!
### டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில்

கொழும்பு, சனி

வைத்திய நிபுணர்களினதும் டாக்டர்களினதும் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுவருகிறது. வேலைநிறுத்தத்தைக் கைவிடுமாறு சுகாதார மந்திரி திரு. பதியுதீன் மஹ்மூத் விடுத்த கோரிக்கையை வேலைநிறுத்தம் செய்யும் வைத்திய நிபுணர்களும் டாக்டர்களும் நிராகரித்துவிட்டனர். இது விஷயமாக திரு பதியுதீன் மஹ்மூத்தைச் சந்திக்கும் யோசனையையும் அவர்கள் நிராகரித்துவிட்டனர்.

கொழும்பு பகுதி ஆஸ்பத்திரிகளில் அவசர நோயாளர்களையும் விபத்துக்குள்ளாகியவர்களையும் அனுமதிக்கும் வேலைகள் செய்யப்படுவதாகவும், கைவசமுள்ள டாக்டர்கள் இதை செய்து வருவதாகவும் அரசாங்க அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

கண்டி, குருநாகல், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளிலும் அவசர நோயாளிகளும் காயமுற்ற நோயாளிகளும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும், அதிகமாக எல்லா ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சைக்கு வரும் நோயாளர் தொகை குறைந்துள்ளதாகவும் அதே அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய பட்ஜட்

புதுடில்லி, பெப் 29

இன்று பார்லிமெண்டில் நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி எதிர்வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜட்டைச் சமர்ப்பித்தார். இந்த ஆண்டில் வருமானம் 2092 கோடி ரூபா வரகவும் செலவினங்கள் 2041 கோடி ரூபா எனவும் 318 கோடி பாதுகாப்புக் காரியங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. 175 கோடி ரூபா துண்டுவிழுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் முயற்சிக்கு ஊக்க மளிக்கப்படுவதாகவும் பட்ஜட் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## மலேசிய பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது

கோலாலம்பூர், பெப். 29

மலேசியாவின் இருராஜாங்க சட்டசபைகளும் கலைக்கப்பட்டுள்ளன. இருசபைகளுக்குமான தேர்தல்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தோனேஷிய-மலேசியா தகராறு நீடித்திருக்கும் இச் சமயத்தில் நடைபெறும் இத்தேர்தல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததென உதவிப் பிரதமர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்

## பீடித் தொழிலாளர் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலுள்ள முல்லா பீடிக்கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர். தொழிலாளர்கள் சமர்ப்பித்துள்ள மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றும்வரை வேலைநிறுத்தம் நீடிக்கும் என்று பீடித் தொழிற்சங்க சம்மேளனத்தின் வட மாகாண கிளை உதவிக் காரிய

(10-ம் பக்கம் பார்க்க)

## பெட்ரோலியம்கார்ப்பரேஷன் சபை ராஜினமா

கொழும்பு, சனி

இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் சபை உப தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமியும் மற்றும் சபை அங்கத்தவர்களும் தமது ராஜினமாக்களை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துவிட்டதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களின் ராஜினமாபற்றி அறிவிப்பதற்கு முன்னர் சபைக்கு புதிய அங்கத்தவர்களையும், தலைவரையும் நியமிப்பதில் கைத்தொழில் மந்திரி தீவிர முயற்சி எடுத்துவருகிறாராம். சபையின் புதிய தலைவராக திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை நியமிக்கப்படுவார் என

(10-ம் பக்கம்பார்க்க)

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சருகுகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL — METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
PHONE 397 JAFFNA — ROYAL DISPENSARY — T'GRAMS ROYAEL

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி?

"அத்திரி" எழுதுகிறார்

[1-3-1964 தொடக்கம் 7-3-1964 வரை]

### மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரத்தில் நீங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமான வேலைகள் வந்துசேரும். ஓய்வு ஒழிச்சலில்லாமல் கடுமையாக உழைக்கவேண்டும். இதனால் வாழ்க்கையில் சலிப்பும் தட்டக்கூடும். பிணைநிற்க வேண்டிய சந்தர்பங்கள் அதிகமாய் ஏற்படும். அந்தச் சமயங்களில் மிகவும் நிதானமாக நடந்துகொள்ளவேண்டும். தர்மகைங்கரியங்கள் பலவற்றில் தலைப்போடவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். அதில் சிரத்தையெடுத்து செய்தீர்களானல் புகழும் புண்ணியமும் ஏற்படும். வெள்ளிக்கிழமை உங்களுக்கு நன்மையான நாள்.

### இடபம்

(கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்களிலும் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் உறவினர் ஒருவரின் விவாகப் பேச்சுகளில் நீங்கள் பங்குபற்றநேரிடும். உங்களை முன்வைத்தே பேச்சுவார்த்தைகளை நடத்துவார்கள். இதில் பங்குபற்றுவதால் பின்னுக்கு உங்களுக்கு நன்மையுண்டு. பல்லில் அல்லது முகத்தில் உஷ்ண சம்பந்தமானரோகங்கள் இந்த வாரமத்தியில் ஏற்படக்கூடும். எவ்வளவு வசதியான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்கு இந்த வாரத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். இந்த சூழ்நிலை வியாழக்கிழமையளவில் ஏற்படும்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4-ம் பாதங்களிலும், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) மனநிம்மதியை ஏற்படுத்த இந்த வாரத்தில் மிகவும் கஷ்டப்படுவீர்கள். எந்தக் காரியமும் மிகவும் தாமதமாகிக் கொண்டேயிருக்கும். இதனல் பொறுமை இழக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படும். உங்கள் குடும்பத்தினரும் உங்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய வார்த்தைகளைப்பேசி உங்கள் பொறுமையைப் பதம்பார்ப்பார்கள். எந்தச் சந்தர்பத்திலும் கோபத்தையடக்கி நிதானமாக காரியங்களைக் கவனித்தீர்களானல் சுகமடைவீர்கள். செவ்வாய்க்கிழமை உங்களுக்கு அநுகூலமான நாள்.

### கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதத்திலும், பூசம், ஆயிலியத்திலும் ஜனனமானவர்களுக்கு) நீங்கள் பல நாட்களாக எதிர் பார்த்த கடிதமொன்று இந்த வாரதத்தில் வந்துசேரும். பண வருவாயைப் பொறுத்த வரையில் இந்தவாரம் சுமாராக இருக்கும். உங்கள் நண்பர் ஒருவரின் வருகையினல் உங்களுடைய சொந்த திட்டங்களெல்லாவற்றையும் மாற்றியமைக்கவேண்டி நேரிடும். சில முக்கியமான தஸ்தாவேஜுகளுக்கு கைஎழுத்துப் போட வேண்டிய சந்தர்பங்கள் இந்த வாரத்தில் ஏற்படக்கூடும். புதன்கிழமையளவில் சிலமுக்கியமான சம்பவங்கள் நிகழக்கூடும். பொதுவாக இந்த வாரம் நன்மையாக இருக்கும்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) பண நெருக்கடியைச் சமாளிக்கவேண்டுமானல் மிகவும் கட்டுப்பாட்டுடன் செலவழிக்கவும். கைமாற்று கொடுக்கவோ அல்லது பொறுப்பு நிற்கவோ இந்த வாரத்தில் துணியக்கூடாது. வரும் என்று எதிர்பார்த்தபணம்காசுகள்மிகவும் தாமதத்தில் வந்துசேரும். இதனல் பலவிதமான சிக்கல்கள் வாரமத்தியில் ஏற்படும். நெருங்கிய உறவினர் ஒருவர் இந்தவாரம் மறையக்கூடும். வயிற்றில் ஏற்படும் சில கோளாறுகளினல் தேகசுகம் பாதிக்கப்படும். உங்கள் சகோதரர் ஒருவருடைய சுகமும் இந்தவாரத்தில் பாதிக்கப்படும்.

### கன்னி

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இரத்த சம்பந்தமான சில கோளாறுகளினல் தேகசுகம் பாதிக்கப்பட்டாலும் படுக்கையில் கிடக்கக்கூடிய சுகயீனங்கள் ஏற்படாது. இந்த வாரத்தில் எந்தவிதமான பணவருவாயையும் எதிர்பார்கமுடியாது. குடும்பத்திலுள்ளவர்களின் சுகயீனங்களால் பொருள் செலவும் அலைச்சலும் ஏற்படும். கடன்படவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டாலும் வார இறுதியில் நிலைமை சீரடைந்துவிடும். மற்றவர்களின் உதவியை நாடினீர்களானல் அது உபத்திரவமாக வந்துசேரும்.

### துலாம்

(சித்திரை 3, 4-ம் பாதங்களிலும், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) வழமையிலும் பார்க்க கூடியமுயற்சியில் இந்த வாரத்தில் ஈடுபட வேண்டி நேரிடும். அதிகப்படியான உழைப்பினல் உங்கள் தொழிலில் உயர்ச்சியைக்காண்பீர்கள். முந்தியவாரங்களிலும் பார்க்க இந்த வாரம் அதிக உற்சாகமாகயிருப்பதை உணர்வீர்கள். நீங்கள் தலைப்போடும் காரியமெல்லாம் இந்தவாரம் இலகுவில் கைகூடும். பொருள் விஷயமான பிரச்னைகளை எளிதில் சமாளிக்கக்கூடிய சாமர்த்தியத்தை இந்த வாரத்தில் பெறுவீர்கள். இந்த வாரத்தில் மனச்சந்தோஷமானபிரயாணங்களுக்கும் இடமுண்டு.

### விருச்சிகம்

(விசாகம் 4-ம் பாதத்திலும் அனுஷம், கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய நேர்மையான போக்கை மற்றவர்கள் சந்தேகக்கண் கொண்டு பார்ப்பார்கள். உங்கள் வீட்டுப் பிரச்னையில் இந்த வாரத்தில் ஒரு முடிவுக்கு வருவீர்கள். உங்களுடையபொறுப்புக்களில் சிலவற்றை உதறித்தள்ளுவதா அல்லதுதொடர்ந்து பொறுப்பேற்று அந்தக்காரியங்களைக் கவனிப்பதா என்ற முடிவுகள் இந்த வாரத்தில் தெரியவரும். உங்களுடைய சொந்த அலுவல்கள் இந்த வாரத்தில் திருப்திகரமாக இருக்கும். சனி அல்லது புதன் கிழமைகள் உங்களுக்கு மிகவும் அநுகூலமான நாட்கள்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) ஏதாவது புது முயற்சிகள் அல்லது தொழில் ஆரம்பித்தீர்களானல் தகுந்த அனுபவமுள்ளவர்களுடைய புத்தியுடன் நடப்பது நல்லது. உங்களுடைய அசட்டுக்கௌரவத்தை உதறித் தள்ளிவிட்டு உங்களுடைய நண்பர்களை அணுகுவீர்களானல் மிகுந்த உதவியைப் பெறுவீர்கள். கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டீர்களானல் பணவருவாயை இழந்துவிடுவீர்கள். பலவிதமான புதுப்புது சிந்தனைகள் இந்த வாரத்தில் மனதில் உதிக்கும் வார இறுதியில் பணநிலைமை மிகவும் திருப்திகரமாக இருக்கும்.

### மகரம்

(உத்திராடம், 2, 3, 4-ம் பாதங்களிலும், திருவோணம், அவிட்டம் 1, 2-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் அதிகப்படியான வேலைகளில் ஈடுபட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். உங்களுடைய வருங்கால நிலைமையை ஓரளவுக்கு சீர்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் இந்த வாரத்தில் ஏற்படும். வாரமத்தியில் ஏற்படக்கூடிய குழப்ப நிலைமைகளை எதிர்த்து நிலைமையை சீராகவைத்துக்கொள்ளுங்கள். எந்தவிதமான அவசர காரியமாக இருந்தாலும் மிகவும் ஆராய்ந்தே செய்ய வேண்டும். உங்கள் நண்பர்களும் உறவினர்களும் உங்களைத் துரிதப்படுத்துவார்கள். அவர்களைப் பொருட்படுத்தாமல் நிதானமாக நடந்துகொள்ளவும்.

### கும்பம்

(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும், சதயம், பூரட்டாதி, 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) சில முக்கியமான பத்திரங்களில் கையெழுத்துப் போடவேண்டிய சந்தர்ப்பங்கள் இந்த வாரத்தில் ஏற்படும் உங்கள் உத்தியோக சம்பந்தமாகவோ அல்லது தொழில் சம்பந்தமாகவோ ஒரு பிரயாணம் இந்த வார இறுதியில் ஏற்படும். நீங்கள் விரும்பாவிட்டாலும் உங்களுடைய நண்பர்கள் உங்களை உல்லாசப் பிரயாணங்களுக்கு இழுத்துக் கொண்டு போவார்கள். இதனல் பல அசம்பாவிதமான சம்பவங்கள் நிகழக்கூடும். அதிகமாக நசிந்துநடப்பவர்களிடம் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

### மீனம்

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும், உத்திரட்டாதி, ரேவதியிலும் ஜனனமானவர்களுக்கு) எவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்து நடந்தாலும் உங்களுக்கு கீழ்ப்படிவில்லாமல் உங்களுக்குக்கீழ் வேலைபார்ப்பவர்கள் தொல்லைகளைத் தருவார்கள். பெருந்தன்மையாக நடந்துகொண்டாலும் கண்டிப்பாகவும் கடுமையாகவும் நீங்கள் நடக்கவேண்டி நேரிடும். பணவிஷயத்தில் நீங்கள் இந்த வாரம் சற்றுத் தாராளமாக நடந்து கொள்ளலாம். செலவுக்கு தக்க வருவாய் இந்த வாரத்தில் ஏற்படும். முன் நீங்கள் எதிர்பார்த்த பணமொன்று இந்த வாரத்தில் வந்துசேரும். வியாழக்கிழமையில் கொடுக்கல் வாங்கல் செய்வது நல்லது.

## இரவில் வந்தான் இறைவன்

— நவாலியூர் சோ. நடராசன் —

இரவில் வந்தான் இறைவன்
வரவுபார்த் திருந்த வையக முறங்கும்
நேர்மை உலகினில் நிறுத்திடச் சிலுவை
ஏறிய இறைமகன் இரவினில் வந்தான்.
பால்மறந் துறங்கிய பசுங்குழந்தைக்குக்
காலையி லேனும் கண்டம் நனைத்திடச்
சேலையை யுடுத்துத் தெருவினில் நடந்தாள்
எற்றி நடந்தவவ் வேழையை நோக்கினன்
முற்றிய விளமையின் முறுக்கினற் கண்ணிணை
காமக் கொடுங்கனல் கனன்று புகைக்கச்
சேமத் தெருவிடைத் திரியுமோர் செம்மல்.
உள்ளமு முடலுமுருகிய வெஃகெனக்
கள்ளமில்லா தவக் கடவுட் திருமகன்
வேகமா யணுகியவ் விளைஞனைத் தொட்டே
"சித்த மழகிய செல்வனே! மங்கையை
எத்தை நினைத்துநீ இவ்வணம் நோக்கிஞய்?"
என்று கேட்டான். இளையவன் பார்த்தான்
"எந்தாய்! குருடனு யிருந்த வெனக்கு நீ
தந்தாய் காட்சியைச் செய்வது வேறென்"
மனுமகனந்த மங்கையை அணுகித்
"தனிமையி லிரவில் தப்புறு வழியில்
திரிவதென் தாயே செப்புதி" என்ருன்.
"ஏசு, என்னிறைவா" என்றவள் கனிந்தாள்
"பேசுவ தென்னையென் பிள்ளைக் குணவிலை
காசுதந் தருளாய் கடவுளே" என்ருள்.
முன்னைநீ நான்செய் பாவம் முழுவதும்
சொன்ன பொழுதே துடைத்துக் காத்தாய்
பின்னைமற் றெனக்கினிப் பிழைப்புவே
[றுண்டோ?"
சொன்னவள் வெடிபடச் சிரித்துநின் ருளால்.
நகர வாயிலைக் கடந்தனன் நம்பி
வகரமாக வளைந்ததோர் மேனியன்
சிந்திய கண்ணும் சிதைந்த நெஞ்சமும்
கொந்திய துயருமாய்க் குழைவதைக் கண்டே
நெருங்கி "ஐயனே, நீண்டதுன் துயர்சொல்
வருந்துதி சொல்லென", வாய்விட்டுரைத்தான்
"மண்ணிதென் வாழ்வு மடிதிறந்தேனுக்
கண்ணல்நீ மீட்டு முயிரினை அளித்தாய்
என்னினி வேறிங் கியற்றவல்லே" னெனச்
சொன்னதும் திருமகன் துயரொடே கினனே.

★

## வளர் தெங்கு

— வே. ஐயாத்துரை —

நிலத்தைத் தோண்டி நீர் நிறைந்த
கலத்தை வைத்தே மூடினேன்
தலத்து நீரை இறைத் திறைத்து
கலத்தை மேவி ஊற்றினேன்.

கலத்து நீரும் வற்றிப் பூத்து
துடித் தெழுந்தாள் பிள்ளையும்
நிலத்து நீரை உண்டுஉண்டு
நெடிது கூடி வளர்ந்தனள்.

களைத்து இளைத்து வருபவரை
காத்து நிழல் கொடுத்தனள்
கனத்த பூவைத் தலையிற்சூடி
கரக மாடி நின்றனள்.

வளர்த்த நன்றி மறந்திடாது
மனதிற் கேற்ற நீரினை
சிரத்தின் மீது சுமந்திறக்கி
செய்த நன்றி காத்தனள்.

குலத்தை வளர்த்து வளத்தைப் பெருக்க
குலைக ளீனும் தென்னையாள்
நலத்தைப் பெருக்கி நாட்டின் வாழ்வில்
தனத்தைப் பேணிக் கொள்ளுவீர்.

மில்க் வைற்
நீல
சவுக்காரம்
★
சவுக்காரம்
வாங்கும்
போது
மில்க்வைற்
நீல




சவுக்காரம என்று கேட்டுவாங்குங்கள்.
இது ஒரு சிறந்த தயாரிப்பு.
மில்க் வைற்
நீல
சவுக்காரம் ஒன்றே
உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.

# மணமகனுக்கு கடிநாயும் பாம்பும் காணிக்கை

## வனக்குறவர் வாழ்வில் சில விநோத வழக்கங்கள்

— "சீவா" —

ஈழநாட்டில் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் சீதனக் கொடுமையால் எத்தனையோ பருவமங்கையர் கண் கலங்குவதையும், எத்தனையோ குடும்பங்கள் இதனால் சீர்கெட்டு சீரழிந்து போனதையும் காண்கிறோமல்லவா? இப்படியெல்லாம் சீதனக் கொடுமை தாண்டவமாடும்போது கருநாகத்தையும் கடிநாயையும் சீதனமாக வாங்கிக்கொண்டு வெற்றிகரமாக வாழ்க்கை நடத்தும் சமூகமொன்று இருக்கிறது தெரியுமா? அவர்கள் தாம் இலங்கையிலுள்ள காடுகளில் அலைந்து திரிந்து வாழ்க்கை நடத்தும் வனக்குறவர். இவர்களின் சீதன முறை மிகவும் விசித்திரமானது.

இலங்கை வாழ் வனக்குறவர்களில் ஒரு பகுதியினராக மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள சோலைக்காடுகளில் இடையிடையே கூட்டம் கூட்டமாக வசிக்கும் இவர்கள் வேட்டையாடி வேட்டையில் கிடைக்கும் இறைச்சியை உணவுக்கு எடுத்துக்கொண்டு மிகுதியை உலர்த்திபக்கத்திலுள்ள கிராமங்களுக்குக் கொண்டு போய் விற்று அதில் கிடைக்கும் பணத்துக்கு சாராயம் வாங்கிக் குடிப்பார்கள். அத்தோடு கிராமங்களில் பாம்பாட்டியும் பணம் சம்பாதிப்பார்கள். அடர்ந்த காட்டுக்குள் கூட்டம் கூட்டமாக வாழ்க்கை நடத்தும் இச்சமூகத்தினர் சிறு குடிசைகளை அமைத்து அந்தக் குடிசைக்குள் தான் நாய், பாம்பு ஆகிய ஆகியவைகளுடன் படுத்து உறங்குவார்கள். இப்படி இவர்கள் வாழ்க்கை நடத்திக்கொண்டு வரும்போது கல்லோயாத்திட்டம் அமுலுக்கு வந்த காரணத்தினால் கல்லோயாப் பள்ளத்தாக்கிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டன. வனக்குறவர்களின் வேட்டைக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. பல இடங்களில் கூட்டம் கூட்டமாக வசித்து வந்தவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். அக்கரைப்பற்றுக்கு அண்மையிலுள்ள அளிக்கம்பை என்னும் பகுதியில் குடிசைகளை அமைத்துக்கொண்டு வேட்டையில் ஈடுபட்டார்கள். அப்பகுதியிலும் போதுமான காடுகள் அழிக்கப்பட்டு விவசாயம் செய்யப்பட்டுவருவதினால் வேட்டையினால் வாழ்க்கை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. இதனால் அவர்களும் பக்கத்திலுள்ள காடுகளை அழித்து விவசாயம் செய்வதிலும், கால் நடைகள் வளர்த்தலிலும், அயல் கிராமங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளின் வயல்களில் வேலை செய்வதிலும் ஈடுபடத்தலைப்பட்டிருக்கிறார்கள். அத்தோடு தாங்கள் உபயோகித்து வந்த அரைநிர்வாணத்துக்கு முழுக்குப்போட்டுவிட்டு சாரமும் சால்வையும் உடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். பெண்கள் கூட துண்டு உடுப்பதற்குப் பதிலாக சேலையும் சட்டையும் தமிழ்ப் பெண்களைப்போல் அணியும் நிலைக்கு முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். இவர்களின் முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் அக்கரைப்பற்றிலுள்ள கத்தோலிக்க குருவானவர் வண. குக் சுவாமி ஈடுபட்டார்.

வனக்குறவர்களும் இந்த நாட்டின் பிரஜைகளாதலால் அவர்களுக்குக் கூப்பன் புஸ்தகம் வழங்கப்படவேண்டுமென்று எடுத்துக்கொண்ட முயற்சியில் வெற்றிகண்டார் அவர். அளிக்கம்பையில் வசித்துவரும் அத்தனை குறவர் குடும்பத்தினர்களுக்கும் கூப்பன் புஸ்தகம் வழங்கப்பட்டுள்ளது.

அளிக்கம்பையில் வசித்து வரும் வனக்குறவர்கள் தமிழ் மொழி நன்றாகப் பேசுவார்கள். அவர்கள் தமக்குள் பேசிக்கொள்ளும் போது தெலுங்கில் தான் பேசிக்கொள்வார்கள். ஆனால் எழுதமாட்டார்கள். அவர்களின் குழந்தைகளாவது கல்வி கற்கவேண்டும் என்று வண. குக் அவர்கள் கொண்ட அக்கறையினால் அந்த இடத்திலே ஒரு திண்ணைப்பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து ஓர் ஆசிரியரையும் அவர் செலவிலே வைத்து நடத்திக்கொண்டு வருகிறார்.

இந்த வனக்குறவர்கள் ஆதியில் இருந்து முருகனையே வழிபட்டுவந்தார்களாம். ஆடி அமாவாசையில் வரும் பூரணையின்போது அவர்கள் ஒரு சடங்கு செய்வது வழக்கம். வண. குக் சுவாமி அவர்கள் வசிக்கும் இடத்தில் ஒரு கத்தோலிக்க தேவாலயத்தையும் அமைத்து அவர்கள் கத்தோலிக்க மதத்தைத் தழுவக்கூடிய போதனைகள் நடத்தி எல்லோரையும் கத்தோலிக்க மதத்தைத்தழுவச் செய்துள்ளார். அளிக்கம்பையில் வசிக்கும் இலங்கை வனக்குறவர்கள் எல்லோரும் இப்போது கத்தோலிக்க மதத்தவர்களாகி விட்டார்கள்.

அளிக்கம்பையில் வசித்து வரும் வனக்குறவர்கள் கல்லோயாப் பள்ளத்தாக்கிலுள்ள காடுகளில் வேட்டையாடி வாழ்க்கை நடத்திவந்தார்கள். இப்போது வேட்டையாடுவதற்குக்காடும் இல்லாமல் போகவே விவசாயம் செய்வதில் கவனம் செலுத்தி வருகிறார்கள். இவர்களுக்கு கல்லோயா அபிவிருத்திச்சபை குடியேற்றக்காரர்களுக்கு அளிக்கும் வசதிகள் போல் குடியிருக்க வசதியாக வீடும் விவசாயம் செய்வதற்கான நீர்ப்பாசன வசதியுள்ள நிலமும் வழங்கப்படவேண்டுமென்று கல்லோயா அபிவிருத்திச் சபைக்குச் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் வண. குக் சுவாமி குறிப்பிட்டுள்ளார்.

இப்போது இந்த வனக்குறவர்கள் மந்தை வளர்ப்பதிலும், விவசாயம் செய்வதிலும், அயல் கிராமங்களுக்குச் சென்று பாம்பாட்டுவதிலும், ஈடுபட்டுவருகிறார்கள். அத்தோடு உடும்பு, பன்றிபோன்றவைகளையும்வேட்டையாடி விற்கிறார்கள். இதனால் கிடைக்கும் பெரும் பகுதியை மதுபானத்திலே செலவிடுகிறார்கள். அவர்கள் அதிகமாக சினிமாப்படம் பார்க்கும் நிலையில் முன்னேற்றம் பெற்றுள்ளார்கள். வண. குக் சுவாமி எடுத்துக்கொண்ட முயற்சியினால் அளிக்கம்பையில் வாழும் வனக்குறவர் விழிப்புணர்ச்சி அடைந்துவருகிறார்கள்.

இவர்களின் திருமண நிகழ்ச்சிகள் மிகவும் விசித்திரமானதாக இருக்கின்றன. கருநாகமொன்றைப் பிடித்து மகுடியினால் ஆட்டும் திறமையும், ஈட்டியினால் காட்டுமிருகமொன்றை எய்துகொல்லும் திறமையும் இருந்தால்தான் ஒரு வாலிபன் திருமணம் செய்வதற்குத் தகுதியுடையவனும். அப்படித்தகுதி உடையவர்கள் வனக்குறவரின் கூட்டத்தில் இருந்தால் அவர்களின் தந்தையர், கூட்டத்தின் தலைவரிடத்தில் அறிவிக்க வேண்டும். தலைவர் இதற்கான ஒரு நாளைத் தெரிவுசெய்து அந்தக் கூட்டத்திலுள்ள எல்லா வனக்குறவர்களையும் சமுகம் கொடுக்குமாறு அறிவிப்பார். சமீபத்திலுள்ள வனக்குறவர்களின் கூட்டத்துக்கும் அறிவிப்பார்கள். கூட்டத்துக்குச்சமுகம் கொடுக்கும் ஒவ்வொருவரும் தங்களால் ஆன அளவுக்கு சாராயமும் வாங்கிவந்திருப்பார்கள். திருமணப் பேச்சை ஆரம்பித்ததும் எல்லோரும் நிறையசாராயம் குடிப்பார்கள். அப்போது எந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்படும். அப்போதே பெண்ணின் தந்தை சீதனமாக ஒரு கருநாகத்தையும் அதை ஆட்டுவதற்கான மகுடியையும், இரு கடிநாயையும், ஒரு ஈட்டியையும் மணமகனிடம்கொடுப்பார் அதைத்தொடர்ந்து ஒருமாதகாலத்துக்குள் திருமணத்துக்கான ஒருதினம் தெரிவுசெய்யப்படும். தெரிவுசெய்யப்பட்ட தினத்தில் எல்லோரும் ஒன்றுகூடுவார்கள். மணமகனும், மணமகளின் தந்தையும் பெருமளவில் சாராயம் வாங்கி வைத்திருப்பார்கள். கூட்டத்திலுள்ளவர்களும் ஆனவரை சாராயம் வாங்கிவந்திருப்பார்கள். மணமகளின் தந்தை கூட்டத்திலுள்ள எல்லோருக்கும் வேண்டிய அளவான இறைச்சிவறறல் செய்து வைத்திருப்பார்கள். எல்லோரும் ஒன்று கூடும் இடத்தில் இரு குடிசைகள் அமைத்து ஒன்றில் மணமகனையும் மற்றதில் மணமகளையும் விடுவார்கள். பின் எல்லோரும் சாராயம் அருந்துவார்கள். அதன் பின் கூட்டத்தின் தலைவர் மணமகளைக் கையில் பிடித்து மணமகனிடம் ஒப்படைப்பார். அதைத் தொடர்ந்து அன்று இரவு விடியும்வரையும் ஒரே களியாட்டமாகத்தான் இருக்கும். இவர்களின் திருமணங்கள் எல்லாம் இரவில்தான் நடைபெறும். ஒரு தினத்தில் ஆகக்குறைந்தது மூன்று திருமணங்களாவது நடைபெறும். களியாட்டம் முடிந்ததும் அதிகாலையில் மணமகன் தனிமையாக அமைத்த குடிசையிலே புதுத்தம்பதிகள் புதுவாழ்க்கை நடத்துவதற்குச் சென்றுவிடு

(9-ம் பக்கம் பார்க்க)

புராதன இலங்கையும் தமிழரும்

# மூவாயிரம் ஆண்டு முதலே இலங்கையில் நிலைபெற்றிருந்த முருக வழிபாடு

— வித்துவான் கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ. எல். —

விஜயனின் வருகைக்கு முன்பும் அதற்குப் பின்னதாகவும் இலங்கையின் வெளிநாட்டு வாணிபம் முற்றிலும் தமிழரிடமே இருந்து வந்தது. 2113 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கிறிஸ்து சகாப்தத்துக்கு முன் இரண்டாம் நூற்றுண்டில், இவ்வாணிபத்துறையில் ஈடுபட்ட தமிழர் அனுராதபுரத்தில் வசித்து வந்தார்கள் என்பதற்கு சாசனச் சான்றுகள் உள்ளன. மன்னாரை அடுத்த மாதோட்டம் விஜயன் வருகைக்கு முன்னமே செல்வச் செழிப்புமிக்க துறைமுகமாக இருந்து வந்திருக்கிறது. சோழ அரசின் கீழிருந்த காவிரிப்பூம் பட்டினம் போல மாதோட்டமும் பலதேச வாணிபர்களுக்கும் உறைபதியாகத் திகழ்ந்தது.

கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் விஜயனின் அழைப்புக்கிணங்க அவனதுபட்ட மகிஷியாவதற்கு இலங்கை வந்த பாண்டியன் மகளும் அவள் தம் பரிவாரமும் இத்துறைமுகத்திலேயே இறங்கியதாகச் சொல்லப்படுகிறது.

இலங்கையை ஆண்ட எல்லாளனின் நெருங்கிய குடும்ப உறவினன் ஒருவன் கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் இதே துறைமுகம் வழியாகத் தான் தன் படைகளுடன் இலங்கை சேர்ந்தான் என்று வரலாறு கூறும்.

கீழைத்தேசத்துக்கும் மேற்கு நாட்டுக்கும் ஒரு மத்திய கடல் வாணிபத் துறைமுகமாக இருந்து வந்த மாதோட்டம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக அதாவது கி. பி. 9-ம் நூற்றுண்டில், அதன் தனிபெரும் நிலை படிப்படியாக குன்றி மறையலாயிற்று. இந்தப் புராதனத்துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்களில் ரோம, அரேபிய, சீன தேசத்து மண்பாண்டங்கள் இருந்தமை குறிப்பிடுதற்குரியது.

கி. பி. 7-ம் நூற்றுண்டிலும் கூட இத்துறைமுகம் அதன் பெருமை குன்றாது இருந்திருக்கிறது. இக்காலத்தில் நாயன்மார்களான சம்பந்தரும் சுந்தரரும் இத்தலம் குறித்துப்பாடிய பாடல்களில் அதன் வாணிபச் சிறப்பையும் அவ்வூருக்குப் புகழும் பெருமையும் ஈட்டிக் கொடுத்த அங்குள்ள சிவாலயத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

டபிள்யு.ஏ. எஸ். பேக் என்பவர் இத்துறைமுகம் பற்றி எழுதுகையில் 'இப்பிரதேசத்தில் மிகப்பழைய காலமுதலே மக்கள் குடியேறி வசித்திருக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டிருக்கிறார். இந்திய கண்டத்துக்குச் சமீபமாக அது அமைந்திருந்ததையும் அக்காலத்தில் இந்திய கண்டத்துடன் இணைந்திருந்த இராமேச்சுரத்துக்கு இரண்டுபருவக்காற்றுக் காலத்திலும் சீராக கடற் பிரயாணம் செய்யக்கூடிய வாய்ப்பு இருந்ததையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார். சிங்களவர் 'மகாதீத்த' என மாதோட்டத்துக்குப் பெயரிட்டு அழைத்ததையும் அவர் குறிப்பிடுகிறார்.

"திருக்கேதீஸ்வரம் என்பது இப்பகுதியின் ஆதிகாலப் பெயராக இருந்திருக்கவேண்டுமென்றே கருதுகிறேன். தென்னிந்தியரே இலங்கையில் குடியேறிய ஆதி குடிகள் என்பதில் ஐயப்படுவதற்கு இடமில்லை. இங்குள்ள சிவாலயமும் அவர்கள் கட்டியதே என நம்பலாம்" —பேக் இப்படிக் கூறுகிறார்.

'இங்கு, யாழ்ப்பாண வைபவமாலை கூறுவதும் கவனிக்கற்பாலது விஜயன் இலங்கைக்கு அரசனாவதற்கு முன்பு இலங்கையில் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் சிவாலயங்களைக் கட்டியபோது திருக்கேதீஸ்வர ஆலயத்தையும் புனருத்தாரணஞ் செய்தானென்று வைபவமாலை கூறுகின்றது.

சிவவழிபாடானது தமிழரின் முருக வழிபாடு, திருமால் வழிபாடு என்பன போன்றே விஜயன் வருகைக்கு முன்னும் அதற்குப் பின்னரும் இலங்கையில் நிலைபெற்றிருந்ததென்பதற்கு இலங்கையின் வரலாற்றுத் தொகுப்புகளிலும் கல்சாசனங்களிலும் எழுத்து சாசனங்களிலும் போதிய சான்றுகள் உள்ளன. புராதன காலத்து சாசனங்களில் 'சிவன்', 'மகாசிவன்' என்ற பெயர்கள் பலதடவை குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கிறிஸ்து சகாப்தத்துக்கு இரண்டு நூற்றுண்டுகளுக்கு முற்பட்ட ஒரு குகைச் சாசனத்தில் 'இது சிவனர்கோனின் குமாரர் இளவரசர் மகாசுதர்சசிவனுக்குரியது' என்று எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து சகாப்தத்துக்குப் பிந்திய இரண்டம் நூற்றுண்டு காலத்து நூலான சிலப்பதிகாரம், கி. பி. 174-ல் இலங்கையை அரசாண்ட இரண்டாம் கயபாகு மன்னன், சேர மன்னன் செங்குட்டுவன் பத்தினித்தெய்வமான கண்ணகி அம்மனுக்குச் சிலை எடுத்து கோயில் எழுப்பி விழா நடத்தியபோது அவ்விழாவில் கலந்து கொண்டான் எனக் குறிப்பிடுகிறது. கயபாகு இலங்கை திரும்பி இங்கும் பத்தினித் தெய்வத்துக்குக் கோயில் அமைத்தான். அக்காலம் முதலாக பத்தினி அம்மன் வழிபாடு இலங்கையில் பல விடங்களில் இன்றும் நிலைபெற்றிருக்கிறது. கண்டி தலதமாளிகையிலுள்ள கண்ணகி அம்மன் கோவிலையும் கயபாகு மன்னனே அமைத்தான் என்று சொல்லப்படுகிறது. அக்காலம் முதலாக பத்தினித் தெய்வவழிபாடு பற்றி எழுதப்பெற்றுவந்த பல நூல்கள் இன்றுமுள்ளன.

இலங்கையையும் தமிழ்நாட்டையும் அதனதன் கலாசார ஒருமைப் பாட்டையும் இன ஒற்றுமையையும் கொண்டு இணைப்பதற்கு இன்று மட்டில் கிடைத்திருக்கும் பழைய சான்றுகள் இலங்கையில் புத்தளத்துக்கு அருகாமையிலும் தென்னிந்தியாவில் ஆதித்த நல்லூரிலும் எடுக்கப்பட்ட புதைபொருள்களாகும். இவை, கிறிஸ்து சகாப்தத்துக்கு முந்திய ஓராயிரம் ஆண்டு காலத்தில் வாழ்ந்த புராதன தமிழர் தமக்குள் மாண்டோரின் பிணங்களைப் புதைத்து வந்தமையையும் அவ்வழக்கம் இவ்விருநாடுகளிலும் கைக்கொள்ளப்பட்டிருந்ததையும் தெரிவிப்பதுடன் இன்னும் பல ஒற்றுமை அம்சங்களையும் வெளிப்படுத்திநிற்கின்றன. ஆதித்த நல்லூரில் தாமிரபருணிக் கரையில் எடுக்கப்பட்ட புதை பொருள்களில் முருகன் வேலும், சேவற்கொடியும், பூசகர்கள் வாய் கட்டும் உறையுமிருந்தன. இது, முருக வழிபாடானது கிறிஸ்து சகாப்தத்துக்கு முற்பட்ட முதல் ஆயிரம் ஆண்டு காலத்தில் தமிழ் நாட்டில் கைக்கொள்ளப்பட்டிருந்ததென்பதை அத்தாட்சிப் படுத்துவதற்கு பெருமளவு உதவுவதாகும். முருகனின் புகழ் பெற்ற திருப்பதியாக இருந்து வரும் கதிர்காமமே இலங்கையில் மிகப் பழைய ஆலயம் எனச் சொல்லப்படுறது. இவ்வாலயத்தில் இன்றைக்கும் பூசகர்களாகக் கடமை புரியும் 'கபுராளை' எனப்படுவோர் பூசைவேளையில் தங்கள் வாயை மூடித்துணி கட்டிக் கொள்ளும் வழக்கம் இருந்து வருகிறது. கதிர்காமம் பற்றிய புராண வரலாறும் மற்றும் இக்கோயிலின் பழமை பற்றிய ஆராய்ச்சியும் விஜயன் வருவதற்கு வெகுகாலம் முதலே இலங்கையில் முருகவழிபாடு இருந்து வந்திருக்கிறதென்பதற்குச் சான்று கூறுவதாக உள்ளன. இதனால் ஆரியர் இலங்கையில் அடி எடுத்து வைக்கு முன்னமே தமிழரும் முருக வழிபாடும் இலங்கையில் இருந்திருக்க வேண்டும் என்று கிறது.

(இக்கட்டுரை அடுத்த இதழில்முற்றுப் பெறும்.)

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு மாசி மீ 18உ (1-3-64)

# நோயற்ற வாழ்வு

பொதுமக்களாகிய நமக்கு இச்சமயம எவ்வளவோ விதமான சங்கடங்கள். மொழிப்பிரச்னை, அரசியல் பிரச்னை, வாழ்க்கைச் செலவு பிரச்னை, குடும்பப்பிரச்னை முதலாய்கணக்கற்றன. இப்போது ஆஸ்பத்திரி டாக்டர்களின் திடீர் வேலைநிறுத்தப் பிரச்னையும் சேர்ந்து, நம்மில் பலரையும் பெரிதும் திகைக்கவைப்பதாகவுள்ளது.

நமது இலங்கையின் சரித்திரத்திலே இதுவரை ஆஸ்பத்திரி டாக்டர்கள் யாரும் வேலைநிறுத்தம் செய்ததாக நாமறிந்தவரை இல்லை. அவர்களையும் சிறப்பாக 'ஸ்பெஷலிஸ்ட்' எனும் நிபுணர்களையும் தெய்வத்தைவிட அதிகசக்தி வாய்ந்தவர்களாகக் கருதி மதித்துவந்திருக்கிறோம்.

நமது கண், காது, மூக்கு, நாக்கு எல்லாம் சரிவர வேலைசெய்வதாயின் அதற்கு இந்த ஸ்பெஷலிஸ்டுகள் தான் காரணமென்றும் அவற்றுக்கு ஏதும் 'ரிப்பேர்' வந்துவிட்டால் அவர்கள் எப்படியும் காத்துவிடுவர் என்றும் நம்மில் பலரும் நம்பி வாழ்கின்றோம்.

ஏதும் நோய் வந்துவிட்டால் போத்தலும் கையுமாக முதலில் ஆஸ்பத்திரிக்கு ஓடுகின்றோம். பிறகுதான் தெய்வத்தைப்பற்றிய எண்ணம் வருகின்றது. கோவிலுக்கு அல்லது தெய்வத்துக்குச்செலுத்தும் காணிக்கை 50 சதம் அல்லது ஒரு ரூபாய் தான். இந்த ஸ்பெஷலிஸ்டுகளுக்கோ 21 ரூபாய் காணிக்கை. இக்கணக்கின்படி தெய்வத்தைவிட இந்த நிபுணர்கள் பலமடங்கு மதிப்புவாய்ந்தவர்களென்று நாம் கருதுகிறோமல்லவா?

இந்த 21 ரூபாய் காணிக்கைப் பணத்தில் கைவைத்ததும் தான் வந்துவிட்டது இவர்களுக்கு ஆத்திரம். இயற்கைதானே. சம்பளம் கூடுதலாகக் கொடுப்பதாயினும், 'பிரைவேட் பிராக்டிஸ்'தான் தங்களுக்கு வேண்டுமென்று அவர்களில் பலரும் கேட்கின்றார்கள். ஏன் தெரியுமா?

மாதம் அதிகச்சம்பளம் கிடைத்தாலும், அதற்கு வருமானவரி செலுத்திவிடவேண்டியுள்ளது. மாதாமாதம் சம்பளத்தில் கழித்துவிடுகின்றார்கள். ஆனால் இருபத்தொருரூபாய் காணிக்கைப்பணத்தை ஆஸ்பத்திரி படுக்கைக்காக வாங்குவதாயின், அவற்றைக் கணக்கில் காட்டாமல், வருமானவரியிலிருந்து தப்பிவிடலாம். இதனால்தான் 'பிரைவேட் பிராக்டிஸ்' வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தி வேலைநிறுத்தமும் செய்வதாக அவர்களில் ஒருவரே (அந்தரங்கமாக) கூறினரென்று தெரிகிறது!

வருமானவரியிலிருந்து தப்பவேண்டுமென்று நம்மில் பலரும்தான் விரும்புகிறோம். ஆனால் மாதச்சம்பளம் வாங்குபவர்களிடம் அரசாங்கம் அதைக்கசக்கிப் பிழிந்து வாங்கிவிடுகிறது. குடும்பப்பொறுப்புகள், வாழ்க்கைச்செலவுகள் முதலியன எவ்வளவு இருப்பினும் கடன்பட்டு வாழ்க்கை நடத்தினும் வருமான வரியிலிருந்து தப்பமுடியாது. ஆனால் நிபுணர்கள் முதலியோர் பெறும் காணிக்கைகள், கப்பங்கள், கொள்ளை இலாபங்கள் முதலியன கணக்கில்வராமையால் அவர்கள் சுலபமாக இந்த வரி கெடுபிடியிலிருந்து தப்பிவிடமுடிகிறது. இந்த நல்ல வாய்ப்பைப் பறிப்பதாக இருந்தால் யாருக்குத்தான் ஆத்திரம் வராது!

அதனால் இந்த டாக்டர்கள் 'ஸ்டிரைக்' செய்வதைப்பற்றி யாரும் வியப்படைவதற்கில்லை. ஆனாலும் இதனாலும் பொதுமக்களாகிய நமக்கு ஒரு பெரிய நன்மை ஏற்படுவதாகவுள்ளது. டாக்டர்களையே இனி நம்பிவாழ முடியாதென்பதை இதனால் உணரலானோம். திடீரென அவர்கள் எந்தச் சமயமும் 'ஸ்டிரைக்' செய்து நம்மைக் கைவிட்டுவிடலாம்!

அவர்கள் தொடர்ந்து வேலைசெய்வதாயினும், நமக்கு வரும் நோய்களையெல்லாம் அவர்கள் மருந்தினாலோ, திறமையினாலோ தீர்த்துவிடுவார்களென்பதற்கு உத்தரவாதமில்லை. அவர்களே சிற்சில நோய்களுக்கு உட்படுகிறார்கள். எமன் பெரிய பெரிய 'ஸ்பெஷலிஸ்டு'களையும் விடுவதில்லை. இந்த நிலையில் நாம் நம்மைக் காத்துக்கொள்ள என்ன செய்யவேண்டுமென்ற முக்கிய கேள்வி எழுகின்றது.

நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வமென்பர். 'நோயற்றவாழ்வு நான் வாழவேண்டும்' என்று இறைவனை பெரியோர்கள் வேண்டிக்கேட்டுள்ளனர். நோயில்லாதபடி நாம் வாழமுடிந்தால் இந்த வேலைநிறுத்தங்கள் பற்றி நாம் எவ்விதகவலையும் படத்தேவையில்லை. ஆனால் நோயில்லாமல் வாழமுடியுமா? அது எப்படி என்ற கேள்வி எழுகின்றது.

இயற்கை நியதியிலிருந்து நாம் வழுவுவதால் தான் நம்மில் பலருக்கும் நோய் வருகின்றது. உடலுக்கு ஏதும் நோய் வருவதாயின், அதைப் பற்றித் தாம் வெட்கப்படுவதாகவும், முறை தவறி விட்டதற்கு அது ஓர் அடையாளமென்றும் கூறுவார் மகாத்மா. மனிதர்களாகிய நாம் தவறுகள் செய்கிறோம். தண்டனையும் பெறுகின்றோம். இது சகஜம். தவறு செய்யாமல் நம்மைக் காத்து வழிநடத்திச் செல்லக்கூடியது தெய்வமே என்றும், பிரார்த்தனையால், தெய்வத்தால்ஆகாதது எதுவுமில்லையென்றும் பல பெரியோர்களும் நமக்குத் தங்கள் மேலான அனுபவங்களால் உறுதிமொழி கூறியிருக்கின்றார்கள்.

அப்படி முறையான வாழ்க்கையை, சுகாதார வழியிலே நடத்த நமக்குத் தெய்வமே துணைபுரியவேண்டுமென்ற அதிக நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்ய இப்போது வேலைநிறுத்தம் செய்யும் டாக்டர்கள் நம்மைப் பெரிதும் தூண்டிவிட்டுள்ளனரல்லவா?

ஈழவளநாட்டுச் சிவன்கோவில்கள்: 1

# வண்ணை நகர் வைத்தீசுவரன் கோவில்

— வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ. —

யாழ்ப்பாண வரலாற்றிலே வண்ணை நகரில் உள்ள வைத்தீசுவரன் கோவில் மிகப் பிரசித்திபெற்றது. தமிழ் அரசர்கள் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல இந்துசமய கோவில்கள் அமைக்கப்பட்டன. ஆயினும் போர்த்துக்கீசர் காலம இருள் காலமாக இருந்தது. ஒல்லாந்தர் காலத்தில் கடைசிக் கூற்றில் அவர்கள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சற்றே மனமாற்றம் கொண்டு சில சைவக்கோவில்களை அமைக்க உத்தரவு அளித்தனர். அதில் ஒன்று வண்ணைச் சிவன்கோவில்.

வண்ணைநகர் வைத்தீசுவரன் கோவில் வைத்தியலிங்கச் செட்டியாரால் 1787-ம் ஆண்டு தொடக்கப்பட்டு 1790-ல், 174 ஆண்டுகளுக்குமுன் கும்பாபிடேகஞ் செய்யப்பட்டது. வைத்தியலிங்கச் செட்டியாரின் தந்தை கோபாலச்செட்டியார் ஒல்லாந்தர் அரசுசெய்யுங் காலத்திலே சோழநாட்டினின்று வந்து துவிபாஷிகராயிருந்த கொச்சிக் கணேசையரின் சேவகத்தில் இருந்தார். கணேசையர் கோபாலச்செட்டியாரைக் காரணம் இன்றிக் கண்டித்தபோது செட்டியார் அவர் சேவகத்தில் இருந்து விலகிப் பலசரக்கு வியாபாரஞ் செய்துவந்தார். அவர் வேம்பின் கீழ் ஒரு விநாயகரைப் பூசித்துவந்தனர். அவ் விநாயகர் கோவில் கடைத்தெருவிலுள்ள வேம்படிப்பிள்ளையார் கோவில் எனப்படுகிறது. இன்றும் யாழ்ப்பாணம் வெஸ்லியன் மிஷன் பாடசாலை இருக்கும் இடமும் கோட்டடியும் வேம்படி என்றே வழங்கப்பட்டுவருகிறது.

கோபாலச் செட்டியாருக்கு ஒரு மகன் பிறந்தான். அதைக் கேள்விப்பட்ட அவருடைய நண்பரும், தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிகுந்த பாண்டித்தியம் உடையவருமான கூழங்கைத் தம்பிரான் என்பவர் கோபாலச் செட்டியாரின் வீட்டுக்குச் சென்று வைத்தியலிங்கச்செட்டியாரைக்குழந்தையாகக்கண்டு ஆசீர்வதித்தார்.

வைத்தியலிங்கச் செட்டியார் பன்னிரண்டு வயதாக இருந்த பொழுது ஒல்லாந்த தேசாதிபதியின் மனைவியார் கோபாலச் செட்டியார் கடைக்குச் சென்றார். அப்பொழுது அச்சிறுவன் தேசாதிபதியின் மனைவி கையில் மாதுளம் பழம் ஒன்றைநீட்டினர். அச்சிறுவனை யாரெனக்கேட்டு, இன்னாரென அறிந்தார், தம்முடன் வைத்து அவரை வளர்க்க விரும்பித் தேசாதிபதியின் மனைவியார் அவரைப் பெற்றாரிடம் கேட்டுக் கொண்டுசென்றனர். வைத்திலிங்கனுக்குத் தேசாதிபதியின் மனைவியார் ஒல்லாந்தமொழியும் கற்றுக்கொடுத்தார். பதினெட்டு வயது வரும்வரையும் அங்கேயே வைத்தியலிங்கச் செட்டியார் இருந்துவந்தார்

ஒருநாள் தேசாதிபதி முத்துக் குத்தகை விற்கப்போகிறார் எனக்கேள்விப்பட்டு வைத்தியலிங்கன் தன்னை வளர்த்த தேசாதிபதியின்மனைவியாரிடம் சென்றிருந்தார். தான் முத்துக் குத்தகை நடத்த விரும்புகிறார் என்பதை அவரிடம் தெரிவித்தார். தேசாதிபதியின் மனைவியார் தமது பர்த்தாவாகிய தேசாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினர். தேசாதிபதி இதனை வாங்கிப் பார்த்து வைத்தியலிங்கச் செட்டியாருக்கே குத்தகையை எழுதித் தாமே பிணையாக நின்றார். அக் குத்தகையை வைத்தியலிங்கச் செட்டியார் ஏற்றுக் கிரமமாக நடத்தி ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் இலாபம் பெற்றார். இவ்வாறு இவர் மூன்றுமுறை குத்தகை பெற்று பேரிலாபம் அடைந்தார். வைத்தியலிங்கச் செட்டியாரின் தாயார் பெயர் "தையலாச்சி". அவர் தமது சோழநாட்டில் உள்ள "சங்கேந்தி" என்னும் ஊரில், ஒருநாள் முத்துக்காய வைத்துக்கொண்டிருக்கும்பொழுது ஒரு பிடி முத்தை வறியவன் ஒருவனுக்கு வழங்கினர் என்று கூறுவர் "தையலாச்சி". அவர்கள் வண்ணார்பண்ணையிலும் வாழ்ந்தார்.

வைத்தியலிங்கச் செட்டியார் மூலமாகவே ஒல்லாந்த தேசாதிபதி எந்த விலைபெற்ற பொருளையும் வாங்கினர். இதனால் கோட்டையில் உள்ளவர்களுக்கும், பட்டாளத்தாருக்கும் உணவு உடை முதலிய பண்டங்களை விற்பனவு செய்தார்.

வைத்தியலிங்கச் செட்டியார் கூழங்கைத்தம்பிரான் என்பவரிடமே பாடம் கேட்டனர். தம்பிரான் ஒருமுறைக்குமேல் ஒரு பாடத்தை ஒருவருக்குஞ் சொல்லார். யாழ்பபாண வைபவமாலை செய்த மயில்வாகனப் புலவர், கூழங்கைத்தம்பிரானின் மாணவர்களில் ஒருவர் ஆவர்.

வைத்தியலிங்கச் செட்டியார் தமக்கு ஒரு சிறந்த மாளிகை கட்ட எண்ணி, கூழங்கைத் தம்பிரானிடம் சென்று தமது கருத்தை வெளியிட்டனர். அதற்குத் தம்பிரான் "உன்னை இந்நிலைக்குக் கொண்டு வந்தவர் பரமபிதாவாகிய வைத்தியலிங்கக் கடவுளும் உலகமாதாவாகிய தையல்நாயகித்தேவியாருமன்றோ? அவருக்கு ஆலயம் வகுத்த பின்னரே நீ உனக்கு மாளிகை கட்டவேண்டும்" என்றார்.

வைத்தியலிங்கச் செட்டியார் அது கேட்டு அவ்வாறே செய்வேன் எனக் கூறித் தம்பிரான் வகுத்த இடத்தை வாங்கி சிவ ஆலயத்தைக்கட்டி சாதாரண வருடம் சித்திரை மாதம் பூர்வ பட்சத்தில் கும்பாபிஷேகம் செய்வித்தார். பெரும்பாலும் செட்

(10-ம் பக்கம் பார்க்க)

# உலக மேடை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகிலேயே அதிகமாக விளம்பரப்படுத்தப்படும் விளையாட்டு அதிபாரகுத்துச்சண்டைப் போட்டிதான். சாம்பியனுக்குத்தான் அதிகவிளம்பரம் உண்டு. ஆனால் இந்தமுறை, வழக்கத்துக்குமாறாக கிளேக்கு விளம்பரம் இருந்தது. இதற்கு முக்கியகாரணம் இரண்டு. ஒன்று இச் சண்டையில் லிஸ்டன் வெற்றி பெறுவது நிச்சயம் என நம்பப்பட்டது. எனவே புதிதாக அவருக்கு விளம்பரம் தேவையில்லை. இரண்டாவதுகாரணம் போட்டியிட்டவரும், தற்போதைய சாம்பியனும் ஆன காஸியஸ்கிளே பெருத்த வாயாடியாய் இருந்தார் என்பது. குத்துச் சண்டைச் சரித்திரத்தில் ஒரு சாம்பியனுக் கெதிராகப் போட்டியிடும் எந்த வீரருக்கும் கிளேயைப்போன்றுவிளம்பரம் அளிக்கப்பட்டதில்லை.

"என்னை எவராலும் தோற்கடிக்க முடியாது. நானே மாபெரும் வீரன்" என்று ஓயாமல் அவர் சொல்லிக்கொண்டு வந்தார். சாம்பியன் ஆனபின்பு சுமார் 10 நிமிஷம் தன்னைத் தானே அவர்புகழ்ந்து கொண்டிருந்தார். தன்னைத் தானே புகழ்ந்துகொள்ளும் கோமாளியாகவும், அகங்காரக்காரராகவும் சதா அவர் விளங்கியதால் அதிகவிளம்பரமும் அளிக்கப்பட்டார்.

கிளே இதுவரை போட்டியிட்ட 20 சண்டைகளிலும் வெற்றிபெற்றிருக்கிறார். இதில் 16 நொக் அவுட். மியாமியில் நடைபெற்ற இந்தப் போட்டியை அறிவிக்க 500க்கு மேற்பட்ட விளையாட்டு நிபுணர்கள் உலகின் பலபகுதிகளிலிருந்தும் அமெரிக்காவுக்குப்பறந்துசென்றார்கள்.

இப்பத்தியில் ஏற்கனவே இரண்டு தடவை அதிபார குத்துச்சண்டை பற்றி விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. அதிபார சாம்பியன் ஒரு ஒரு உலகப்பிரமுகர். விளையாட்டு உலகின் சக்கரவர்த்தி. ஒரு சில நிமிடங்களில் லட்சக்கணக்கில் சம்பாதிப்பவர். பல கெடிலாக், ரோல்ஸ் ராய்ஸ் கார்களை வைத்திருப்பவர். கிளே, தனது கார்களிலேயே டெலிபோன்களையும் இணைத்திருக்கிறார். அதிபார சாம்பியன், தேசியவீரராகக்கணிக்கப்படுபவர். உலகில் குத்துச்சண்டைக்கு கோடிக்கணக்கான ரசிகர்கள் உண்டு.

விளையாட்டுக்களிலேயே மிக அபாயமானது குத்துச்சண்டைதான். முகம் பெயரும். விழி பிதுங்கும். தோள் எலும்பு கழன்றுவிடும். மரணமும் ஏற்படும். ஆனல் இதை ஒருமுறை நேரில் ரசிக்க ஆரம்பித்தால் அது நிரந்தரமாகக் கவர்ந்துவிடும்.

உலக சாம்பியன்கள் அதிக ஆண்டுகள் நீடிப்பதில்லை. இப்போதெல்லாம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக, புதியபலம்பெற்று பலர் போட்டிக்கு வந்துவிடுகிறார்கள். "பிரௌன் பாம்பர்" என அழைக்கப்பட்ட ஜோ லூயிஸ் மட்டுமே 10 ஆண்டுகளுக்கு மேல் எவராலும் முறியடிக்க முடியாத பெருமையைப்பெற்றிருந்தார்.

எதுவாயினும், கிளே இன்று சாம்பியன். அவரது வாயைப் போலவே அவரது குத்துக்களும் உக்கிரமானவை. இன்று எவராலும் அவருடன் நின்றுபிடிக்க முடியாது என்பதை மியாமியில் அவர் நிலைநாட்டிவிட்டார்.

# உலகமேடை

## சூ-என்-லாய்

இதை வாசிக்கும் போது சீனப் பிரதமர் இலங்கையை விட்டுப் புறப்பட்டிருப்பார். ஆனால் அவரது விஜயத்தின் எதிரொலி சில காலத்திற்கு நீடித்திருக்கும்.

சீனப் பிரதமர் இலங்கைக்கு இப்போது வந்துபோனது அவரது இரண்டாவது விஜயமாகும். அதே சமயம், தற்போதைய அவரது சுற்றுப் பிரயாணத்தில் இது இரண்டாவது கட்டமும் ஆகும்.

ஆபிரிக்காவில் அவர் முதல் கட்ட சுற்றுப்பிரயாணத்தை நடத்தினார். இரண்டாவது கட்டமாக அவரது ஆசிய சுற்றுப்பிரயாணம் அமைந்தது.

சூ என்-லாய் இலங்கையை விட்டுச் சென்றுவிட்டதால், சில விஷயங்களை சுதந்திரமாக எழுத நமக்கு உரிமை உண்டு. நமது விருந்தோம்பும் பண்பையும், வரவேற்பையும் இது எவ்வகையிலும் பாதிக்காது. இரண்டும் வெவ்வேறு விஷயங்கள்.

இந்தியாமீது, சீனா தாக்குதல் நடத்தியபின் அதன் செல்வாக்கு பல நாடுகளில் வீழ்ச்சியடைந்துவிட்டது. சீனா பற்றி ஆபிரிக்க நாடுகளில் அவநம்பிக்கையும், ஆசியநாடுகள் சிலவற்றில் அச்சமும் ஏற்பட்டது. சீனா இத்தகைய விளைவை எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக இந்தியாவின் உள்நாட்டு பலவீனங்கள் தமக்கு பெருவாய்ப்பு அளிக்கும் என நம்பியே அது பெருந் தாக்குதலில் ஈடுபட்டது. ஆனால் மாறாக, நாட்டில் சகல பிளவு சக்திகளும் ஒன்றுபட்டு சீன எதிர்ப்பை வெளியிட்டன. அது மட்டுமின்றி, மேற்கு நாட்டு ராணுவ சாதனங்களும் இந்தியாவில் குவிய ஆரம்பித்தன. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் சீனாவுக்குப் பெரும் பிரதிகூலமாக அமைந்தன.

தமது கட்சியில் நியாயம் இருக்கிறதென்பதை எடுத்துக்காட்ட கோடிக்கணக்கான பணச்செலவில் சீனா பிரசாரம் நடத்தியது. ஆனால் இதுவும் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை. பீகிங்கின் நோக்கம் பற்றிய சந்தேகத்தை பல புதிய நாடுகளின் மனவிருந்து அகற்ற முடியவில்லை. அமெரிக்கத் தலைமையிலுள்ள மேற்கு நாடுகளையும், ரஷ்யத் தலைமையிலுள்ள கிழக்கு நாடுகளையும் பகைத்துக் கொண்டுள்ள நிலையில், இதர நாடுகளிலும் செல்வாக்கை இழக்கும் நஷ்டத்தைச் சீனா விரும்பவில்லை. சீனாவின் பல நோக்கங்களுக்கு அது பல வழிகளிலும் முட்டுக்கட்டையாய் இருக்கும். எனவே தான், இயன்ற அளவு ராஜீயப்பலன் பெறும் பொருட்டு சூ-என்-லாய் ஆபிரிக்க நல்லெண்ண சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்தார்.

சீனப்பிரதமர் சுமார் 10 ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்றார். அங்கு சில உண்மைகளை அவர் கண்டறிய முடிந்தது. பீகிங் வானொலி மூலமும், இதர பல வழிகளிலும் எவ்வளவோ பிரசார இயக்கம் நடத்திய போதிலும், இந்தியாவுக்கு ஆபிரிக்க நாடுகளில் இருக்கும் செல்வாக்கை அவரால் உணர முடிந்தது. சில நாடுகள் இந்தியா மீது சீனா நடத்திய ஆக்கிரமிப்பு பற்றி அவரிடம் பகிரங்கமாகவும் அதிருப்தி தெரிவித்தன. சமீபத்தில் கலகங்கள் ஏற்பட்ட கிழக்காபிரிக்க நாடுகள் சூ-என்-லாயின் விஜயத்தை ரத்துச்செய்தன. ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டைக்கூட்ட வேண்டுடுமென்ற அவரது யோசனைக்கு சில நாடுகளே இணங்கின. சூ-என்-லாயின் முதல் கட்ட சுற்றுப்பிரயாணம் இதன் பின் முடிவடைந்தது.

அடுத்த கட்டம் பர்மா, பாகிஸ்தான், இலங்கை, இந்த நாடுகளில் அவர் விடுத்தகூட்டறிக்கைகளில் இந்திய-சீன எல்லைப்பிரச்னையைச் சமாதானமாகத் தீர்க்கவேண்டும் என வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இது ஆபிரிக்க சுற்றுப்பிரயாணத்தின் எதிரொலியாகவும் இருக்கலாம். சீனா, பரஸ்பரம் விட்டுக்கொடுத்து எல்லைப்பிரச்னையைத்தீர்க்க முயலும் எனச்சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியவில்லை. எனினும் இவ்விஷயத்தில் சீனாவுக்கு உண்மையில் மனமாற்றம் உண்டாகுமானால், அது உலக அபிப்பிராயத்தின் எதிரொலி என்றே சொல்லவேண்டும்.

சீனப்பிரதமரின் பாகிஸ்தான் விஜயம் ஜெனரல் அயூப்புக்கு ஒரு வெற்றியெனக்கூறலாம். காஷ்மீர் விஷயாக இதுவரை மதில் மேல் பூனையாக இருந்த சீனா, இப்போது அங்கு சர்வஜனவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறது. அதேசமயம் காஷ்மீரில் கடந்த 10 தினங்களில் சில அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றன. யுத்த நிறுத்த எல்லைக்கோட்டிற்குள், மறைந்திருந்து தாக்கும் கொரில்லா முறைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. சீனாவில் பாகிஸ்தானியர் கொரில்லா பயிற்சியில் ஈடுபட்டிருப்பதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. பிரதமர் சூ-என்-லாய் பாகிஸ்தானில் தங்கியிருந்த சமயத்தில் எல்லைக்குள் தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன. பாதுகாப்புச்சபையில் காஷ்மீர் விஷயம் பலனளிக்காததைத் தொடர்ந்து, சீனப்பிரதமர்விஜயத்தின் போது விஷயங்கள் இப்படியெல்லாம் நடந்திருப்பது சந்தேகத்தைகிளப்புவதாக உள்ளன.

தொடர்ச்சியாக இப்படிப் பல சம்பவங்கள் நடைபெறுமா என்பது இனித்தான் தெரியும். சீனா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளைப் பொறுத்தவரை தமது வேண்டாத நாடுகளுக்கு எந்தெந்த வகையில் இடையூறு விளைவிக்க முடியுமோ, அவ்வளவையும் சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவை பயன் படுத்தி வருவது கண்கூடு. அடிப்படைக்கொள்கைகளில் வித்தியாசம் கொண்ட சீனாவும், பாகிஸ்தானும் குறிப்பிட்ட சில பொது நோக்கத்திற்காக ஒன்றுபட்டிருப்பது விந்தையான விஷயம்.

சீனாவுடன் இந்தியா எல்லைத்தகராறைத் தீர்த்துக்கொள்வது அனைவருக்கும் நன்மை பயக்கும். பாகிஸ்தானுக்கும் அதனால் நன்மை உண்டு என்பதை அயூப் அறிவார். மேற்குநாட்டு ஆயுதங்கள் இந்தியாவில் குவிவதை இதன் மூலம் தடுத்துவிடலாமென பாகிஸ்தான் அதிபர் நம்புகிறார். ஆனால் பாகிஸ்தானுடன் தகராறு நீங்குவது வேறு விஷயம். இந்தத்தகராறு நீடிப்பதன் மூலமே காஷ்மீரில் பாகிஸ்தான் அதிக நன்மைகளைப் பெறமுடியும். இந்த விஷயங்கள் சிந்தனைக்குரியவை.

★

## சூங் சிங் லிங்

நாதமும் இசையும் கொண்ட இப்பெயருடைய பெருமாட்டி நேற்று இந்தநாட்டில் இருந்தார். சீனமக்கள் குடியரசின் உப ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் இப்பெண்மணி, "சீனாவின் தந்தை" எனப் புகழ்பெற்ற டாக்டர் சன்யாட் - சன்னின் மனைவியார். சன்யாட்சன்னுக்குப் பிறகு, அவரது வாரிசு என்ற பெயரில் நீண்ட காலம் சீனாவை ஆண்டவரும், கம்யூனிஸ்ட் புரட்சியை அடுத்து இப்போது போர்மோசாவை மட்டும் "தேசியசீனா" என்ற பெயரில் ஆட்சி நடத்தி வருபவருமான மார்ஷல் சியாங்கை ஷேக்குக்கு அவர் மைத்துனி முறை.

ஒரு காலத்தில் சூங் குடும்பம் சீனாவில் புகழ் பெற்று விளங்கியது. செல்வாக்கும், செல்வமும் பெற்று விளங்கிய இக்குடும்பத்தில் மூன்று சகோதரிகள். ஒருவர் சன்யாட்சன்னை மணந்தார் மற்றொருவர் சியாங்கை ஷேக்கை மணந்தார். இன்னொருவர் சியாங் ஆட்சியிலிருந்த மந்திரி ஒருவரை மணந்தார். சூங் சகோதரிகள் ஆடம்பரமும், அழகும், அறிவும் மிகுந்தவர்கள். அமெரிக்காவில் கற்றவர்கள்.

கோமிண்டாங் ஆட்சியின் போது சீனாவை சியாங் குடும்பத்தினரே ஆண்டுவந்தனர். ஒருவகையில் அரசாங்கம் சியாங்கை ஷேக்கின் குடும்பச் சொத்தாகவே விளங்கியது. மூன்று சூங் சகோதரிகளும் ஆட்சிபீடத் தலைவர்களை மணந்து இந்தக் குடும்பத்தின் செல்வாக்கை மேலும் அதிகரித்தனர்.

ஆனால் புரட்சிக்குப்பின் ஸ்ரீமதி சியாங்கை ஷேக் ஏராளமான சொத்துக்களுடன் தனது கணவனுடன் தைப்பேக்குச் சென்றுவிட்டார். மற்றோர் சகோதரியும் போர்மோஸாவுக்குச் சென்றார். ஸ்ரீமதி சன்யாடசன் மட்டும் கம்யூனிஸ்ட் புரட்சியின் ஆதரவாளராக இருந்து உபஜனாதிபதியானார்.

ஆனால் பொதுவாக இந்தச் சகோதரிகளில் அதிகம் புகழ் பெற்றவர் ஸ்ரீமதி சியாங்கை ஷேக் தான். மேனாட்டு அலங்காரத்துடன், அழகாக ஆங்கிலம் பேசும் திறனையும் அவர் பெற்றிருந்தார். உலகப்புகழ் பெற்ற பெண்மணிகளில் அவரும் ஒருவர். இவரை மணப்பதற்காகவே பௌத்தரான சியாங்கை ஷேக், கிறிஸ்தவராக மாறினார்.

யுத்தத்தின்போது சியாங்கைஷேக் வல்லரசுத் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்பட்டார். ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின், சியாங்கை ஷேக் ஆகியோர் சேர்ந்ததே அப்போதைய உலகத் தலைவர்கள் மகாநாடு.

சியாங்கை ஷேக் தம்பதிகள் இந்தியாவுக்கு வந்து வைஸ்ராய் லின்லித்கோ பிரபுவின் விருந்தினராகத் தங்கியிருந்தனர். இத்தம்பதிகள் அப்போது மகாத்மாகாந்தியையும் சந்தித்தனர்.

சியாங்கை ஷேக் குடும்பத்தினர் நேரு குடும்பத்தின் நண்பர்களும் கூட. இந்தியாவில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் தேசப் போராட்டத்தில் சிறை சென்றிருந்தபோது, ஸ்ரீமதி சியாங்கை ஷேக் உயர்தர சீனத்தேயிலையை அவருக்குத்தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருந்தார். சிறையில் நல்லதேயிலை கிடைக்காது என்பதே இதற்குக்காரணம்.

சூங் சிங் லிங் என்ற ஸ்ரீமதி சன்யாட்சன் மக்கள் சீனக் குடியரசின் உப ஜனாதிபதியானபின்பே அவரது பெயர் பிரபல்யமடைந்தது. ஆனால் ஸ்ரீமதி சியாங்கைஷேக் தமது நடுத்தர பிராயத்திலேயே உலகப்புகழ் பெற்றிருந்தார்.

சீனாவில் புதிய ஆட்சி ஏற்பட்டபின், கம்யூனிஸ்ட்நாடுகளுக்கடுத்து, அதை அங்கீகரித்த கம்யூனிஸ்ட் அல்லாத முதலாவது நாடு இந்தியா தான். தமது குடும்பநண்பரான சியாங்கைஷேக்கை நேரு காலைவாரிவிட்டு, பீக்கிங்கை அங்கீகரித்தது ஏன் எனக் கேட்காதீர்கள். நியாயமும், நட்பும் வெவ்வேறானவை. அதுதான் நேரு காட்டும் வழி.

★

## சாம்பியன் கிளே

புளோரிடாவில் நடைபெற்ற உலக அதிபார குத்துச்சண்டைப் போட்டியில் 22வயதான காஸியஸ் கிளே சாம்பியனானது எவரும் எதிர்பார்க்காத விஷயம். பிரபல குத்துச்சண்டை நிபுணர்கள் அனைவரும், கடந்த 25-ம் திகதிவரை உலகசாம்பியனாய் விளங்கிய லிஸ்டனே வெற்றிபெறுவார் என திட்டமாக நம்பினர். முன்னாள் உலக சாம்பியன்களான ரொக்கி மார்ஸியானோ, ச்மெலிங் ஆகியோர், லிஸ்டன் 6 ரவுண்டுகளில் எதிரியை "நொக் அவுட்" செய்வார் எனக் கருதினர். ஆனால் முடிவு வேறுவிதமாய் இருந்தது. இந்தச் சண்டையில் 1-வது, 4-வது ரவுண்டுகளில் கிளே வெற்றி பெற்றார். 2, 3, 5-வது ரவுண்டுகளில் லிஸ்டன் வெற்றிபெற்றார். 6-வதுரவுண்டு இருவருக்கும் சமமாய் இருந்தது. ஆனால் 7-வது ரவுண்டை ஆரம்பிக்க மணிஅடித்தபோது, லிஸ்டன் தனது ஆசனத்திலிருந்து எழவில்லை. முதலாவது ரவுண்டின் இறுதியில் தமது இடதுதோள் மூட்டு விலகிவிட்டதால் தொடர்ந்து பொருத முடியாதுஎன்று கூறிவிட்டார், எனவே கிளே வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. லிஸ்டன் வீழ்த்தப்படவில்லை, ஆனால் இனி முடியாது எனக் கூறிவிட்டதால், "டெக்னிக்கல் நொக் அவுட்"டுக்கு அவர் உள்ளானார்.

இந்தச் சண்டையில் லிஸ்டனுக்குக் கிடைக்கும் பணம் சுமார் 65 லட்சம் ரூபாய். கிளேக்கு 30 லட்சம் ரூபாய். 6ரவுண்டு மட்டுமே அவர்கள் சண்டையிட்டிருப்பதால் மொத்தம் 18 நிமிஷம் [illegible] ஆயிற்று. சண்டையை 10லட்சத்துக்குமேற்பட்டவர்கள் அருகிலுள்ள டெலிவிஷன் சினிமாக்களில் பார்த்தனர். அமெரிக்கா முழுதும் பலலட்சக்கணக்கில் பார்த்தனர். வானவெளிக்கிரகம் மூலம் ஐரோப்பாவெங்கும் கோடிக்கணக்கானோருக்கும் காட்டப்பட்டது. இன்னும் சில தினங்களில் உலகம் முழுதும் சினிமாவில் காட்டப்படும் போது, இலங்கையிலுள்ள நாமும் பார்க்கலாம்.

கோதாவுக்கருகில் இச்சண்டையைப் பார்ப்பதற்கான டிக்கெட் ஒன்றுக்கு 1250 ரூபாய். அதற்கடுத்த ஆசனங்களுக்கு தலா 500 ரூபாய். அதிபார குத்துச்சண்டையில் கோடிக்கணக்கில் வருமானம் உண்டு. லிஸ்டனுக்கு வருமானத்தில் 40 சதவிகிதமும் கிளேக்கு $22\frac{1}{2}$ சதவிகிதமும் கிடைக்கின்றன.

அமெரிக்கா, ஐரோப்பா கண்டங்களில் குத்துச்சண்டை 15 அல்லது 16 ரவுண்டுகள் நடக்கும். ஒரே ரவுண்டில் முடிப்பது சாம்பியனின் திறமையைப் பொறுத்தது. இப்படித்தான் லிஸ்டன் சென்ற இருதடவைகள், இரண்டு நிமிஷங்களில் பெட்டர்ஸன் என்ற வீரரை 'நொக் அவுட்' செய்து லட்சக்கணக்கான பணம் தட்டினார். ரசிகர்களுக்கோ ஏமாற்றம். ஆயிரக்கணக்கில் டிக்கெட்டுக்கு பணம் கொடுத்து உடனடியாக எழுந்துவருவதென்றால் எப்படியிருக்கும்?

(4-ம் பக்கம் பார்க்க)

# மலைக்குகையில் அஞ்ஞாதவாசம் புரிந்த மா-சே-துங்

## சீன பொதுவுடமைக் கட்சியின் வரலாறு

— வி. என். கி. —

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அக்கிராசனர் என்ற முறையில் பரந்து விரிந்து கிடக்கும் சீன மக்கள் குடியரசை ஆட்சிபுரியும் மா-சே-துங்கைப் போல உலகில் வேறெந்த தலைவரும் பெருந்தொகையான மக்களின் அதிபதியாய் இருக்கவில்லை. 1949-ம் வருடம் ஒக்டோபர் மாதம் பீகிங் நகரிலுள்ள பெரிய இம்பீரியல் அரண்மனையில் அவர் அரியாசனம் அமர்ந்தபோது சீன மக்களுடைய வாழ்வில் ஒரு புதிய சகாப்தம் பிறந்தது. மாபெரும் சக்கரவர்த்திகள் எல்லாம் ஆண்டு வந்த சீன தேசம் ஒரு குடைக்கீழ், ஒரு நவீன அரசியல் முறைக்குட்பட்டது.

சீனத்தின் தென்மேற்கு மாகாணமாகிய ஹூனானில் ஓர் ஏழைக்கமக்காரனின் புதல்வராய்ப் பிறந்த மா, பள்ளிக்கூடப் படிப்புகளுக்கு சிறுவயதிலேயே சலாம் போட்டுவிட்டு, மஞ்சு ராஜவம்சத்தின் ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்து நவசீனத்தின் தந்தை என்றழைக்கப்படும் டாக்டர் ஸன்யாட்ஸென்னுடன் புரட்சிப்போருக்குப் புறப்பட்டுவிட்டார். 1921-ம் ஆண்டு ஷாங்காய் நகரத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சி பிறந்தது. மா அதற்குக் காரியதரிசியானார். சீனத்தில் அச்சமயம் பெரிய அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. இன்று போர்மோஸா தீவில் அரசு புரியும் தேசிய சீனத்தின் தலைவர் ஜெனரல் சியாங்கை ஷேக் அப்பொழுது பெரியபுரட்சித்தலைவராகவிளங்கினர். மாவும் அவருடைய சகாக்களும் சியாங்கின் குவோமின்டாங் கட்சியில் சேர்ந்து கொண்டார்கள்; ஆறு வருடங்கள் கழித்து மாவின் செல்வாக்கு மேலிடுவதை உணர்ந்த சியாங் அவரைக் கட்சியிலிருந்து துரத்திவிட்டார். அதற்குப்பின் 'மா-சே-துங் மலைப்பகுதிகளில் பதுங்கி ஒளித்துக்கொண்டே தமது கட்சியையும் சேனை வீரர்களையும் ஒன்று சேர்த்து ஒழுங்குபடுத்தினார்.

இந்தச் சமயத்தில் ஜப்பான் சீனத்தின் மீது படையெடுத்ததானது மாவுக்கு நல்லவாய்ப்பாய்ப் போய்விட்டது. ஏற்கனவே ஊழல்கள் மலிந்த சியாங்கை ஷேக் ஆட்சி ஜப்பானிய தாக்குதலைத் தாங்க முடியாமல் மிகவும் திண்டாட்டப்பட்டது. தமது கட்சிக்கு ஆதரவு சேர்ப்பதிலும் பார்க்க, குடியானவ மக்களிடையே ஜப்பானிய துவேஷத்தை வளர்த்துக்கொண்டால் சண்டை, முடிந்தவுடனே தமது லட்சியம் நிறைவேறும் என்பதை மா சே துங் உணர்ந்து கொண்டார். ஜப்பானை எதிர்த்து சியாங்கின் படைகள் தமது பலத்தைச் செலவிட்டன. மா தந்திரமாக மலைப் பிராந்தியங்களிலே மறைந்திருந்து கொண்டே தாமும் ஜப்பானுக்கெதிராக கொரில்லாப் போராட்டம் நடத்தினர்.

ஏழு வருடங்களாக நடந்த சீன-ஜப்பான் யுத்தம் சியாங்கின் அரசைப் பலவீனப் படுத்தினது மட்டுமல்லாமல் ஜப்பானிய ஏகாதிபத்திய வெறியர்களையும் களைக்கப் பிடித்துவிட்டது. யுத்தம் ஒருவாறு முடிந்தபோது சியாங்கின் கட்சியிலுள்ளவர்கள் நாட்டைப் புனர்நிர்மாணம் செய்வதை விடுத்து தங்கள் சுயநலன்களைப் பூர்த்தி செய்வதில் அதிக சிரத்தை எடுத்தார்கள். இதைக்கண்ட மா சே துங் உடனே தமது கம்யூனிஸ்ட் புரட்சியை ஆரம்பித்தார். கொரில்லா வீரர், சியாங்கின் போக்குவரத்து வசதிகளைத் துண்டித்து அவர் பட்டாளங்களைப் பட்டினி போட்டனர். தோல்வி மனப்பான்மை குடிகொண்டு விட்டது. சியாங்கின் படைகள் சின்னாபின்னமாகின.

மலைக்குகையில் அஞ்ஞாதவாசம் புரிந்த மா சே துங்கும் தோழர்களும் வெளிப்பட்டு சீன மக்கள் குடியரசை ஸ்தாபித்தனர்.

எழுபது வயது முதிர்ந்துவிட்ட மா சே துங் இன்று எழுபத்தொரு கோடி மக்களின் தனிப்பெரும் தலைவராகத் திகழ்கிறார்.

# தொடர் யாத்திரிகன் கதை

"நிலாம்பரி"

மாங்காய்ப் பாலுண்டு மலைமீதிருப்போர்க்கு...

சுவாமியார் என்ன சொல்கிறார்? மாங்காய்ப்பாலும் கள்ளிப் பாலும் சுண்ணம்பும் வேரும் விராயும் உண்டு விஞ்ஞானிகள் அக்கினிபோரும் சித்த புருஷர்களாக மலைமீது ஏறி அமர்ந்து யோகம் செய்யப்போகட்டும் என்று சாபம் போடுகிறாரா?

இவ்வாறு நான் எண்ணமிட்டிருந்தபோது சுவாமியார் சொன்னார்:—

தம்பி, வீரனும் சூரனுமான இருபெரும் மல்லர்கள் ஒருபோது பெரும் சண்டையிட்டார்கள். வீரனவன் மகா பராக்கிரமசாலியாயிருந்தபோதிலும் சூரனை எளிதில் கொன்று வெற்றிபெறமாட்டாதவனாயினான். சூரனோ வெட்ட வெட்டத் தழைத்தெழுந்தான். அதனால் மனச்சோர்வுற்று திகைத்தான் வீரன். இப்படியாக, வகையறியாது கலங்கிநின்ற வீரனுக்கு சூரனைப் பற்றிய ஓர் இரகசியம் பட்டென்று மனத்தில் உதித்தது. உடனே, மேற்கொண்டு சண்டைபோடுவதைக் கைவிட்டு அங்கிருந்து நழுவினான். ஏழு கடலுக்கப்பால் எங்கேயோ வெகுதொலைவில் ஒரு தேசத்திலுள்ள ஒரு மலைக் குகைக்குள்ளே சூரனின் உயிர்நிலையம் யாருமறியாதபடி எவரும் அணுகாதவாறு ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தான். அதைக் கைப்பற்றினாலே சூரனைக் கொல்லமுடியுமென்பது தெரிந்த மாத்திரத்தே வீரன் வாயுவேகம் மனோவேகமாக அவ்வூர் நோக்கிப் பறந்தான்.

ஏழுகடல் தாண்டி ஏழாவது கடலில் மறுகரையில் ஒரு மாமலையின் எட்டாவது சிகரத்தில் அதன் ஒரு குகையில் சூரனின் உயிர்நிலையம் அடக்கமாயிருந்தது. வீரன் ஏழுகடலும் தாண்டி மலைக்குகையை அணுகி குகைக்குளளிருந்த ஒரு பிலவு வழியாக இறங்கிச் சென்றான். பிலவினுள்ளே ஒரு பொந்து, அந்தப் பொந்தினுள்ளே ஒரு மாடம், மாடத்தின் நடுவே ஓர் இரும்புப் பெட்டகம் இருந்தது. பெட்டகத்தைத் திறந்தால் அதனுள்ளே ஒரு செப்புப் பெட்டி காணப்பட்டது. செப்புப் பெட்டியைத் திறந்த மாத்திரத்தே உள்ளே இருந்தது மற்றொரு மரப்பெட்டி. மரப் பெட்டிக்கு அதற்குரிய சாவியைப் போட்டுத் திறந்தால் அதன் உள்ளே வெள்ளிச் சிமிழ் ஒன்று பளிச்சிடுகிறது. கூட, ஒரு நாகசர்ப்பம் படமெடுத்துச் சீறுகிறது. நாகத்தை தன் கைவாளின் ஒரே வீச்சில் வெட்டிப்போட்டுவிட்டு ஓசைப்படாமல் மெதுவாக வெள்ளிச் சிமிழைத்திறந்தான். வெள்ளிச் சிமிழுக்குள்ளே ஒருரூபா நாணயம் அளவில் வட்டவடிவாய் அமைந்த மற்றொரு கண்ணாடிச் சிமிழ். சூரனின் உயிர்நிலையம் அதற்குள்ளே அடக்கமாயிருந்தது. வீரனவன் மகிழ்ச்சி பரவசத்துடன் அதை எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக சூரனிடம் திரும்பி தோள் கொட்டி ஆர்ப்பரித்து மீண்டும் சண்டை தொடங்கச் சித்தமானபோது சூரனோ அவன் முன் பிணமாகிக் கிடந்தான்.

இவ்வாறாக வீரனையும் சூரனையும்பற்றிய கதையைச் சொல்லிய சுவாமியார் "உயிர் நிலையதலைக் கைப்பற்றுவது பற்றி நீர் கூறியது எனக்கு இந்தக் கதையை ஞாபகப்படுத்தியது. நீர் சொல்வதன்படி, இனிமேல் எல்லாம் மாங்காய்க்கும் முருங்கைக் காய்க்கும் பூசணிக்காய்க்கும் பதில் மாங்காய் மாத்திரை முருங்கைக்காய் மாத்திரை துவரங்காய் மாத்திரை என்று முழுக்கவும் ஒரே மாத்திரைகளும் குளிகைகளுமாக வரப்போகிறது. ஒரு குளிகையை எடுத்து தண்ணீருக்குள போட்டு சூ, மந்திரக்காளி சொல்வதற்குள்ளாக நமது வீட்டுத் தேவைக்கான மாங்காயும் தேங்காயும் பூசணிக்காயும் அடுப்படித் தண்ணீர் வாளியில் மிதக்கும் ஆனால் மாமரத்தையும் முருங்கை மரத்தையும் பூசணிக்கொடியையும் மட்டும் வீட்டுக்கொல்லையி காணமாட்டோம். அப்படித் தானே?" என்று கேட்டார்.

"இன்னும் ஒரு 50 ஆண்டு காலத்துக்குப்பிந்தி வாழப்போகிற இரண்டாயிரத்து பதினாலாவது ஆண்டு மனிதரான நமது பிள்ளைகளுக்கு இப்படி இன்னும் எவ்வளவோ புதுமைகள் காத்திருக்கும்,பாட்டா. ஒவ்வொன்றினதும் கருவளர்ச்சியைக் கைப்பற்றும் அணுவிஞ்ஞான அறிவாற்றலின் பேறாக இரண்டு மாதத்தில் பருவமடைகிற இதே மாங்காய் நாலுமாதத்துக்குப் பின்னும் ஆறுமாதத்துக்குப் பின்னும்கூட ஒரு தேங்காயளவு பருமனுடையதாவது சாத்தியமாகலாம்."

"அப்பொழுது தேங்காய் பூசணிக்காய் ஆகிவிடுமே. ஆலமரத்தின் கீழ் படுத்திருந்த வழிப்போக்கன் அண்ணாந்து ஆலமரத்தையும் அதன் அற்ப பழங்களையும் பார்த்துவிட்டு 'கடவுளே நீ ஒரு முட்டாள்' என்றான். ஒரு பழம் அவன் கண் புருவத்தில் வீழ்ந்த மாத்திரத்தே கடவுளைப்போலப் புத்திசாலி யார் இருக்கிறார்கள் என்றானும்."

"தேங்காய் பூசணிக்காய் ஆனால் நாமள் எல்லாம் துருவலகில் உட்கார்ந்து தேங்காய் துருவுவது எப்படிஎன்று பாட்டாவுக்குக் கவலைபோலிருக்கு. பூசணிக்காய் அளவு தேங்காயைக் கையில் எடுத்து துருவுவதற்குப்பலசாலிகளான பீமசேனர்களும் பகாசூரர்களும் குண்டோதரர்களும் கூடவே அப்பொழுது தோன்றுவார்கள், பாட்டா. அணுவிஞ்ஞான அறிவாற்றல் மனிதனதும் மற்றும் ஜீவராசிகளினதும் சிசு கர்ப்பம் வரை புரையோடுமாம் —"

"அது நாசமாய் போகட்டும். நமது வருங்காலசந்ததி, அவர்கள் காலத்தில் கண் முன்னை ஆட்டுக்குட்டி போலவும் பூனைக்குட்டிபோலவும் மனிதர்கள் பிறந்து நாலுநாளைக்குமண்டை வீங்க கத்திவிட்டு விழுந்து சாகும் கோரத்தைப் பார்க்க வேண்டாம். பகாசூரனையும் குண்டோதரனையும் திரும்பவும் பூமியில் பார்த்துப்பயப்படவும் வேண்டாம். அக்னிக்கும் வயுவுக்கும் சூரியனுக்கும் பிள்ளைப் பெற்ற குந்திதேவியும், ஒரே நாளில் நூறுபிள்ளைகளைப் பெற்ற காந்தாரியும், உலக்கைத்தடியாகவே பிரசவித்த ஆணும், இராத்தங்காத ரிஷி பிண்டமும், சிசுகர்ப்பத்தைக் கலக்கிய பிரமாஸ்திரமும் நாம் முன்னமே கேள்விப்பட்டிருக்காத அதிசயங்களல்ல. ஏன் தாயுமான சுவாமிகள் கூடத்தான் பாடியிருக்கிறாரே. கந்துகமதக் கரியை வசமாய் நடத்தலாம், கரடி வெம்புலி வாயையும் கட்டலாம், இன்னொருவர் காணமலே தரை மீது உலாவலாம, சலமீது நடக்கலாம், நெருப்பில் குளிக்கலாம், வானத்தை வில்லாக வளைக்கலாம், மணலைக் கயிறாகத்திரிக்கலாம். ஆனால் மனிதனாகப் பட்டவன் தன்சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது காண்—"

"அதற்கும் மாத்திரைகள் கண்டுபிடித்துவிட மாட்டார்களா, பாட்டா" என்றேன்.

(தொடரும்)

## புதிய விண்வெளிக் கப்பல்

### சூரியகிரணங்களைப் பற்றிப் பறக்குமாம்!

சூரிய கிரணங்களால் உற்பத்தியாகும் அழுத்த சக்தியின் மூலம் அண்டவெளியில் விண்வெளிக்கப்பலை இயங்கவைக்க முடியும் என்று இரு சோவியத் கணித நிபுணர்கள் கணிதரீதியாகக் கண்டுபிடித்துள்ளனர். ஒரு விண்வெளிக்கப்பலை சூரிய கிரணங்கள் விநாடிக்கு 2 மில்லி மீட்டர் வேகத்தில் இயக்குவிக்கும் என்று அவர்கள் கணித்துள்ளனர். இந்த விண்வெளிக கப்பல் செவ்வாய் கிரகத்தை 122 நாட்களில் சென்றடையுமாம்.

∴ ∴ ∴

விண்வெளி வீராங்கனை திருமதி வலண்டீனா தெரஷ்கோவா தமக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்கு என்ன பெயரிடலாமென்ற யோசனையில் இப்பொழுது ஆழ்ந்திருக்கிறாராம்.

# சிறுவர் பூங்கா

## நல்ல அப்பு

- ஆசி. செல்வன் -

அப்பு வாயில்
சுருட்டொன்று
அழகாய் புகையும்
வடிவைப்பார்
பொக்குப் பொக்கு
வாயாலே
புகையை வெளியே
தள்ளுகிறார்

சின்னஞ் சிறிய
குடுமியுடன்
செல்லக் கதைகள்
சொல்லிடுவார்
பென்னம் பெரிய
தாடியுடன்
பேசும் கதைகள்
சிரிப்பூட்டும்

கொக்கொக் கென்று
இடையிடையே
கொண்ணை தட்டிப்
பேசிடுவார்
மக்குத் தனமாய்
பேசிவிடில்
மட்டிடன் றெமக்குக்
குட்டிடுவார்

பிப்பிப் பிப் பீக்
குழல் செய்தே
பெருமையாகத்
தந்திடுவார்
சப்பித் தின்னப்
[illegible] பட்சணமும்
சுவையாய் எமக்குத்
தந்திடுவார்

தப்பித் தவறித்
தம்பியுடன்
சண்டை செய்தால்
வெம்பிடுவார்
அப்பப் பூனைகள்
கதை சொல்லி
அணைத்தே உள்ளம்
குளிர்ந்திடுவார்.

## சீன விகடகவி

— சா. அன்ரன் ஜெயக்குமார் —

சீனாவில் டீன் என்ற விகடகவி இருந்தான். அவனைப் பற்றி பல கதைகள் வழங்கி வருகின்றன.

ஒரு முறை டீனுடைய வீட்டில் ஒரு திருடன் புகுந்துவிட்டான். அவனைக் கண்ட டீன் ஒரு பெட்டிக்குள் உட்கார்ந்து கொண்டான். வீட்டில் ஒன்றுமில்லாததால் அத்திருடன் டீன் இருந்த பெட்டியைத் திறந்தான். அதனுள் டீன் இருப்பதைக் கண்டு "ஓஹோ, நீ இங்கே இருக்கிறாயா?" என்று கேட்டான் திருடன். அதற்கு டீன் "ஆமாம், என் வீட்டில் நீ எடுத்துச்செல்ல ஒரு பொருளும் இல்லாததால் வெட்கப்பட்டே ஒளித்துக்கொண்டேன்" என்றான்.

வேறொரு முறை டீன் வீட்டில் திருடர்கள் நுழைந்து அவனுடைய தட்டுமுட்டுச் சாமான்களை எடுத்துக்கொண்டு போகையில் டீனும் அவர்கள் பின்னே சென்றான். திருடர்கள் திரும்பிப் பார்த்தார்கள். அவர்களில் ஒருவன் டீனைப்பார்த்து, "ஓஹோ! டீனா? இந்த நடுஇராத்திரியில் எங்கு போகிறாய்?" என்று கேட்டனர். அதற்கு டீன், ஒன்றுமில்லை. வெகுநாட்களாக வீடு மாற்றவேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஆனால் செலவில்லாமல் நீங்கள் இங்கு சாமான்களைத் தூக்கிக்கொண்டு வருகிறீர்கள். என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்" என்றான.

இன்னொரு நாள் டீனுக்குப் பணம் தேவையாயிருந்தது. மூட்டைதூக்கிக் கூலிபெறலாமென நினைத்து கடைத்தெருவுக்குச் சென்றான். அங்கு ஒரு தனவந்தர் பீங்கான் சமான்களை வாங்கி ஒரு பெட்டியில் அடுக்கிவிட்டு, கூலியாள் கிடைப்பானா என்று பார்த்துக் கொண்டிருந்தார். அவரது கூலி விசித்திரமாயிருந்தது. அவர் பணத்திற்காக மூன்று உபதேசங்கள் கொடுப்பாராம். டீன் இந்தக் கூலிக்கு உடன்பட்டு பெட்டியைத் தூக்கிச் சென்றான். அவர் கூறியது,"சாப்பிடாமல்பட்டினி கிடப்பது நல்லது என்று கூறினால் நம்பாதே. வண்டியில் ஏறாமல் நடந்து செல்வதே நல்லது என்று சொன்னால் நம்பாதே. உன்னைவிட முட்டாள் ஒருவன் இருக்கிறான் என்றால் நம்பாதே" என்பவை.

உடனே டீன் தன் தலைமேலிருந்த பெட்டியைக் கீழே தொடபெனப் போட்டுவிட்டு, "இப்பெட்டியிலுள்ள பீங்கான் சாமான்கள் நொறுங்கவில்லை என்று யாராவது சொன்னால் நம்பவேண்டாம்" என்று சில புத்திகளைக் கூறிவிட்டு அங்கிருந்து அகன்றான்.

## சுவையான செய்திகள்

கலிபோர்னியாவில் உள்ள "கோல்டன் கேட் பிரிட்ஜ்" என்ற பாலம் தான் உலகிலேயே பெரிய பாலமாகும். அதன் ஒரு தூணிலிருந்து மறு தூணுக்கு உள்ள தூரம் 4200 அடிகளாகும். பாலத்தின் இரு கோபுரங்களின் உயரம் 746 அடியாகும். இது ஒரு தொங்கும் பாலம் இதன் அகலம் 90 அடி. நீர் மட்டத்திற்கு மேல் 220 அடி உயரத்தில் நிறுவப்பட்ட இதில், 6 வண்டிப்பாதைகளும் இருக்கின்றன. 1937-ம் வருடம் திறக்கப்பட்ட இது 14 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது!

●

நாய் இனத்தில் ஒரே சமயத்தில் 21 குட்டிகள் போட்ட பெருமை இங்கிலாந்தில் "லேடி மிலார்ட்" என்ற நாயைச் சேர்ந்தது ஆகும்.

—கே கணபதிப்பிள்ளை,
தென்புலோலியூர்.

## பெண்பாற் புலவர்கள்

ச. சிவராஜசிங்கம்

### வெள்ளிவீதியார்

மதுரையில் வெள்ளியம்பதி என்னொரு வீதியுண்டு. அது வெள்ளி வீதி என வழங்கப்பட்டது. அவ் வீதியில் வாழ்ந்தமையால், வெள்ளி வீதியார் என இவர் அழைக்கப்பெற்றார் என்பர் சிலர். வெள்ளி வீதியார் சிறந்த நாவன்மையுடைய பெண்பாற் புலவர்.

வெள்ளி வீதியார் பாடிய பாடல்கள் பதின்மூன்று. அவை அனைத்தும் அகத்துறை தழுவிய பாடல்கள். அவற்றுள் ஒன்றே ஆண்மகன் கூற்று. மற்றவையெல்லாம் தலைவி, தோழி, செவிலி என்ற பெண்பாற் கூற்றுக்களே.

மிகவும் இனிமையான உவமைச் சிறப்புடைய பாடல்களையெல்லாம் வெள்ளி வீதியார் இயற்றியுள்ளார். அவரது பாடலில் உள்ள உவமைச் சிறப்புக்கள் சொல்லற்பாலது. தமிழ்வளர்த்த பெண்ணரசிகளுள் வெள்ளிவீதியாரும் ஒருவராவர்.

●

### குறமகள் குறிஎயினி

இவர் குறவர் குடியிற் பிறந்த பெண்பாற் புலவர் என்பதை அவர் பெயர் வாயிலாக அறிவதைத் தவிரவேறு ஆதாரம் எதுவுமே இல்லை. ஏறைக்கோனைப் பாடிய குறமகள் இளவெயினியாரே இவர்.

இளமையில் ஏறைக்கோனைப் பாடியவராதலின் அங்கே அவர் இளவெயினி எனப்பட்டார் என்றும் தன் வாழ்நாளின் பிற்காலத்திலே பாடிய நற்றிணைச் செய்யுளில் "நின் குறிப்பெவனோ தோழி! என் குறிப்பு" என்ற முதலடியில் குறிப்பு என்ற சொல்லை அடுக்கிவைத்து பாடியகாரணத்தால் இவர் குறிப்பெயினி எனப்பட்டார்.

குறமகள் என்பதை குறிஞ்சி நிலத்தில் பிறந்த நன்மகள் என்று கொள்ளாது குறக்குடியிற் பிறந்த மகள் என்று கூறுதல்தவறுஎன்பார் வேறு சிலர்.

தமிழ்வளர்த்த பெண்பாற் புலவர்களில் குறமகள் குறிஎயினியும் சிறப்புடையவராவர். இனிய கவிதைகளை நகைச்சுவையும் சொற்சுவையும் நிரம்பப் பாடியுள்ளார்.

●

### தாயங்கண்ணியார்

பெயரன்றி பிறிதொன்றும் அறியமுடியாத புலவர் வரிசையில் இவரும் ஒருவர். இவருடைய ஊர் காட்டூராகும். இவர் மிகச்சிறப்புடைய பெண்பாற்புலவர். கவிபுனைவதில் சிறந்த வல்லமையுடையவர்.

தாயங்கண்ணியார் கணவனை இழந்த கைம்பெண்களின் துயர் நிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டவல்லவர்.

கேட்போர்க்கு இல்லையென்று உரையாது அமுதிட்டு வழி அனுப்பவேண்டும் என ஒரு பாடலில் அழகுபடக் கூறியிருக்கின்றார். தருமம் செய்வது புண்ணியம் பெறவே என்ற கருத்திலும் வாழ்க்கையில் தருமம் செய்யாதார் வாழ்ந்துதான் என்ன பயன் எனவும் தாயங்கண்ணியார் கவிகள் புனைந்துள்ளார். புறநானூற்றில் இவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் வளர்த்த பெண்பாற் புலவர்களில் சீரும் சிறப்பும் வாய்ந்த தேன்தமிழ் கவிதைகளை இயற்றிய புலவரில் தாயங்கண்ணியாரும் ஒருவராவர்.

## சிங்களச் சிறுகதை

# சமூக சேவகி

எழுதியவர்:
டாக்டர் கே. பி. டி. விக்கிரமசிங்க
(எம். ஏ., பி. எச். டி. லண்டன்)

தமிழாக்கம்:
"யாழ்வாணன்"

விசாலமானதும், அழகானதுமான வாடி வீட்டின் மாடியறை. அங்கே பன்னிரண்டு மேசைகள். அவற்றின் மேல் வெள்ளைநிறத் துணிகள் விரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நாட்டில் ஐரோப்பியர் நடமாட்டம் தற்போது குறைவாக இருந்தபோதிலும் அவர்களின் வாரிசுகள் குறைந்துவிடவில்லை. அங்கு வருவோரில் பெரும்பான்மையினர் சுதேசி ஐரோப்பியர்களாகத்தானிருந்தனர். இருந்தும் 'ஒறிஜினல்' ஆங்கிலேயர் பலர் ஜோடியாக அமர்ந்து மது அருந்திக்கொண்டும் உணவருந்திக்கொண்டுமிருந்தனர்.

அவர்களுக்குப் பக்கத்தில் மூன்று சிங்களவர் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களிலொருத்தி பெண். மற்ற இருவரில் ஒருவன் இளைஞன். அடுத்தவர் நடுத்தரவயதினர். அவர்களைப்பார்த்துஅப்பெண் "எங்களுடைய பெண்கள் இன்னமும் அடுக்களைக்குள்ளே அடைபட்டுக்கொண்டிருப்பது எங்களுக்கு அவமானம் தருவதாக இருக்கின்றது. என்ன வெட்கக்கேடு!" என மற்றவர்களுக் கேட்கக்கூடியதாகச் சொன்னாள். அவளுடனிருந்த நடுத்தரவயதுடையவர், மிக அழகாக மேல் நாட்டினரைப்போல உடையணிந்திருந்தார். அவர் தலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மயிர்கள் தென்பட்டாலும் அவருடைய வழுக்கைத் தலையை மற்றவர்கள் பார்க்கக்கூடியதாக இருந்தது. அவர் அப்பெண் சொல்வதை அனுசரித்து "எங்கள் பெண்கள் அடுக்களைக்குள் அடைபட்டுக் கிடப்பதைக் காண நானும் ஆச்சரியப்படுகின்றேன். உண்மையில் வெட்கப்படவேண்டியவிடயம் தான். இந்தியாவில் பெண்கள் ஆண்களுடன் சரிசமானமாக நின்று தேச முன்னேற்றத்துக்குப் பாடுபடவில்லையா? அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து முதலிய நாடுகளிலுள்ள பெண்களைப் பாருங்கள்! அவர்கள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள்! எங்களுடைய பெண்களுக்கு ஏன் இவ்வளவு சோம்பேறித்தனம்?" என அவளின் கூற்றுக்கு ஒத்தூதினார்.

"ஆண்கள்தான் காரணம். அவர்களுடைய தவறுதல்களினால்தான் பெண்கள் அடுக்களைக்குள் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெண்களைச் சிறிது உற்சாகப்படுத்தியிருந்தார்களானால் இந்தநிலை ஏற்பட்டிருக்காது" என்றாள் அப் பெண்மணி.

★

நடுத்தரவயதுள்ளவர் போத்தலிலிருந்த மதுவைக் கிளாசில் வார்த்து அத்துடன் வேறு போத்தலிலிருந்து எதையோ அதில் ஊற்றிக் கலந்து அருந்திவிட்டு, "எங்களுடைய மக்கள் இன்னமும் பூரணமாக நாகரிகமடையவில்லை. நாகரிகமடைந்த மக்கள் செய்யும் செயல்களைக் குறைகூறி அவர்களில் குற்றம் காணுகிறார்கள். அல்லது சிரிக்கிறார்கள். எப்படி இந்நாடு முன்னேற்றமடைய முடியும்?" என வாசலில் வந்துகொண்டிருந்த இளஞ்சோடிகளைப் பார்த்தவாறு சொன்னார்.

"முன்னேற்றத்தைப் பொறுத்த மட்டில் இந்நாட்டில் ஆண்களும் பெண்களும் தாங்கள் மற்றவர்களிலும் பார்க்க முன்னணியில் நிற்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நாளாந்தம் நிலைமை சீர்கெட்டுப்போவதற்குக் காரணம் அதுதான்" எனச் சொல்லியவாறு 'சிகரட்' ஒன்றைப்பற்ற வைத்துக் கொண்டான்.

"பெண்கள் தாங்களாகவே உண்டாக்கிக்கொண்ட சூழ்நிலைக்கு எப்படி ஆண்கள் பொறுப்பாகமுடியும்?" அவர்களிருவருடைய சம்பாஷணையில் இதுவரை குறுக்கிடாதிருந்த இளைஞன் அப்பெண்ணை நோக்கிக்கேட்டான்.

"என்னுடைய வாழ்க்கை வரலாற்றைச் சொல்லி அதை என்னால் நிரூபிக்கமுடியும்," எனச்சொல்லிய அப்பெண் 'சிகரட்'டை வாயில் வைத்துக்'குப்' எனப்புகையைவிட்டவாறு தன் கதையைச் சொல்லத்தயாரானாள். அவள் மெதுமெதுப்பான பச்சைச் சேலையும், கையில்லாத ரவிக்கையும் அணிந்திருந்தாள். வயது சுமார் இருபத்தெட்டு இருக்கும். மெல்லிய தோற்றமுடையவள். அவள் நடுத்தரவயதினரைப் பார்த்து "இவருக்கு என்னைப் பற்றித் தெரியாது. என எண்ணுகிறேன்" என்றாள்.

இளைஞனுக்கு உண்மையில் அவளைத்தெரியாது. வாடிவீட்டு வாசலில்தான் அவளைச் சந்தித்தான். அவளுடன் வந்தவர் அவனுடைய நண்பர். அவரது அழைப்பை ஏற்றே அவர்களுடன் சேர்ந்துகொண்டான்.

இருவரையும் அறிமுகப் படுத்திவைத்தார் நடுத்தரவயதினர். பின் அவனை நோக்கி "இவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?" என்றார்.

"ஆம்" என்றான் இளைஞன் வெட்கத்துடன்.

"என்னுடைய கதை உனக்குத் தெரியாது. அதைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கவும் மாட்டாய். அதை அறிந்ததும் பெண்ணுடைய அவலநிலைக்கு யார் காரணமென்பதை நீ உணருவாய்" என அறிவில் முதிர்ந்தவர்கள் கூறுவது போலப் புன்னகை தவழக் கூறினாள் அந்தப் பெண்.

"சொல்லுங்கள், கேட்க ஆசைப்படுகிறேன்" என்றான் இளைஞன் பவ்வியமாக.

★

"எனக்குத் திருமணமாகும் போது வயது இருபத்தொன்று. என் கணவர் என்னை மிக உள்ளன்புடன் நேசித்தார். என் தேவைக்கதிகமான நகைகள், ஆடைகள் எல்லாம் இருந்தன. ஆனால் அவருடைய அனுமதியின்றி நான் சுதந்திரமாக ஒன்றும் செய்ய முடியாது. என்னைப் போன்ற படித்தபெண், கணவன் சொல்வதெல்லாம் சரியென வாழ்நாள் முழுவதும் தலையாட்டிக்கொண்டிருப்பதை விரும்பமாட்டாள். நானும் அந்தவழியையே பின்பற்றினேன். நாங்கள் இந்நாட்டிற்குச் சேவைசெய்யக் கடனப்பட்டிருக்கின்றோம். நாங்கள் எப்படியும் சிறிது நேரமாவது எங்கள் கடமையைச் செய்யத்தான் வேண்டும். கிராம முன்னேற்றச்சங்கம், 'மகிலா' சமிதி, கூட்டுறவுச் சங்கம் - மற்றும் அரசியல் கட்சிகள் எல்லாம் நாங்கள் அவற்றில் பங்கு பற்றுவதுடன், முன்னின்றும் உழைக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றன. கிராமமுன்னேற்ற விடயங்களில் எங்களுடைய தலைமை அவசியமாகத் தேவைப்படுகின்றது. 'கிராம அபிவிருத்தி' போன்ற திட்டங்களில் பெண்கள் பங்குபற்றாது விட்டால் அந்தத் திட்டம் தோல்வியில் முடிவதைக்காண்கிறோம். எனக்குத் திருமணமாகிய சில நாட்களில் கிராமமுன்னேற்றத்திற்காக, பல சங்கங்களின் நடவடிக்கைகளில் தீவிரமாக முன்னின்று உழைத்தேன். அதனால் நான் 'துர்நடத்தையுள்ளவள்' எனப் பலரால் நாமகரணம் சூட்டப்பெற்றேன். நான் ஆண்களின் மேல் கொண்ட ஆசை காரணமாகவே சமூக சேவையில் ஈடுபட்டிருப்பதாகவும், பல ஆண்களுடன் பழகுவதற்கு எனது சேவையை ஒரு கருவியாக நான் பயன் படுத்துவதாகவும் பல கட்டுக்கதைகளைப் பரப்பினார்கள். அவற்றின் பயனாக நான் சமூகசேவையில் ஈடுபடுவதை என் கணவர் விரும்பவில்லை. அதிலிருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறு வேண்டிக்கொண்டார். நான் சேவை செய்வதைத் தடுக்க பலவிதமான தந்திரங்களையும் கையாண்டார். அவரது முயற்சிகள் வீணாயின. நான் தொடர்ந்தும் என்பணியைச் செய்து கொண்டிருந்தேன். ஈற்றில் அவர் என்னிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொண்டார்.

இப்போது நான் விரும்பியபடியெல்லாம் செய்யலாம். தடுப்பார் ஒருவருமிலர். மீண்டும் சுதந்திரப் பறவையாகியதையிட்டு மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய நேரம் முழுவதையும் நாட்டின் முன்னேற்றம் கருதிச் செலவிட விரும்பினேன். பெண்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவும், கிராமமுன்னேற்றம் கருதியும் நாங்கள் பாடுபட முற்படும்போது ஆண்கள் எதிர்க்கிறார்கள். அதைப் பொருட்படுத்தாது நாங்கள் எங்கள் பாதையில் தொடர்ந்து செல்லும் போது 'கெட்டவர்கள்' என முத்திரை குத்திவிடுகிறார்கள். இப்படி இவர்கள் எங்களுக் குத்தடையாக இருந்தால் எப்படிப் பெண்கள் முன்வந்து தங்களது சமூகத்திற்காக உழைக்க முடியும்?"

★

"நீர் சொல்வது முழுக்க உண்மைதான். ஆண்கள் தாம் பெண்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். அதிகமான ஆண்கள் சமூகசேவையில் ஈடுபடத் தங்கள் மனைவிமாரை அனுமதிப்பதில்லை. இது அவர்கள் சமூகத்திற்குச் செய்யும் பாரதூரமான குற்றமாகும். பெண்ணொருத்தி ஆண்களைப்போல சிறந்த சேவை செய்யமுடியும்." இவ்வாறு சொல்லியபடி இளைஞனைத்திரும்பிப்பார்த்து, "இப்பெண்மணி புரிந்துள்ளசேவையைப்போல எத்தனை ஆண்கள் நாட்டிற்குச் சேவை செய்துள்ளார்கள்?" எனக்கேட்டார் அவளது நண்பர்.

அப்பெண் 'கிளாசி'லிருந்த மதுவை ஒரு தரம் அருந்திவிட்டு 'சிகரட்' ஒன்றை வாயில் வைத்துக்'குப்' எனப் புகையை ஊதித்தள்ளியபடி மேலும் பேசத் தொடங்கினாள்.

"நானில்லாவிட்டால் என்னுடைய கிராமத்தில் 'மகில சமிதி' ஏற்பட்டிருக்க முடியுமா? நான் முன்னின்று உழைக்காவிட்டால் கிராமமுன்னேற்றச் சங்கம் திருப்திகரமான முறையில் இயங்கமுடியுமா? சிலர் தன்னலங்கருதிச் சமூகசேவையில் ஈடுபடுகிறார்கள். ஆனால் நான் என் சொந்தப்பணத்தை, நாட்டின் முன்னேற்றம் கருதிச் செலவழிக்கின்றேன். என்னைப்போலச் செயலாற்றும் சுதந்திரம் எத்தனை பெண்களுக்கு இருக்கின்றது?"

"நீங்கள் சொல்வதைப்பார்த்தால் - ஒவ்வொரு பெண்ணும் தங்கள் கணவன்மாரை விவாகரத்துச் செய்துவிட்டுத்தான் அவர்களது நேரத்தைச் சமூக சேவையில் செலவிடவேண்டும், அப்படித்தானே?" என்றான், இளைஞன்.

"அப்படித்தான் ஆண்கள் எல்லோரும் கதைக்கிறார்கள். இவரைப் போன்றவர்கள் இருக்கும்போது எப்படி எங்கள் சமூகம் முன்னேறும் என எதிர்பார்க்கலாம்?" எனக் கேலியாகத்தன் நண்பரைப் பார்த்துக்கேட்டாள்.

"வாலிபர்களே இந்தக்கருத்துடனிருந்தால், மணஞ்செய்த வயதானவர்களிடமிருந்து எதை நீங்கள் எதிர்பார்க்கலாம்?" அவளை மேலும் உற்சாகப்படுத்தும் நோக்கத்துடன், அவளது நண்பர் சொன்னார்.

"நான் விவாகரத்துச் செய்தவள் என்பதற்காக சமூக சேவையில் ஈடுபடும் எல்லோரும் விவாகரத்துச் செய்ய வேண்டுமென்பதல்ல. மனைவி நாட்டிற்காக உழைக்க விரும்பினால், கணவன் கட்டாயம் அவளுக்கு உதவி செய்யவேண்டும். அது அவனது கடமையுங்கூட" என்றாள்.

"சரி. அப்படியானால் ஏன் கணவனே அதைச் செய்யக் கூடாது?" என்றான் இளைஞன்.

"அதுதான் எங்கள் சமூகத்திலுள்ள குறை. தங்களுடைய மனைவிமார் சமூக சேவையில் ஈடுபடுவதை ஆண்கள் விரும்புவதில்லை. எங்களுடைய ஆண்கள் மேல் நாட்டினரைப் போல் முன்னேறவில்லை. ஆகையால்தான் தங்கள் கடமையைச் சரிவரச் செய்கிறார்களில்லை."

★

"நீரும் கொஞ்சம் மது அருந்தும். உமக்கு நாங்கள் அப்போதே தந்திருக்க வேண்டும்" என வாலிபனைக் கேட்டாள் அப்பெண்மணி.

இளைஞன் அப்போதுதான் தேனீர் அருந்தியிருந்தான். அவன் மது அருந்துதல், புகைப்பிடித்தல் முதலிய துர்ப்பழக்கங்கள் இல்லாதவன். ஆதலால் அவளது வேண்டுகோளை நிராகரித்தான்.

"உன்னைப் பார்க்க எனக்கு வியப்பாக இருக்கின்றது. மது அருந்துவதில்லை. புகைபிடிப்பதில்லை. வாழ்க்கை அர்த்தமற்றதாக உனக்கு இருக்க வேண்டும்" என்றபடி மீண்டும் சிரித்தாள். அவளுடன் அவளது நண்பனும் சேர்ந்து கொண்டான்.

"நீங்கள் சொல்லியவற்றிலிருந்து ஒவ்வொரு கணவன்மாரும் தங்கள்மனைவிமாரை விவாகரத்துச்செய்ய வேண்டுமென நான்எண்ணுகிறேன்" என்றான் இளைஞன்.

"நீர் சொல்வது பிழையான கருத்து. தன்னுடைய மனைவியைச் சமூகசேவையில் ஈடுபட அனுமதியாத கணவன் ஒரு மடையன்" என்றாள்.

வாலிபன் கேலியாக நகைத்துவிட்டு,

"சரியாகச் சொன்னீர்கள். இப்போதுதான் நான் உங்களைப் புரிந்து கொண்டேன். தன்னுடைய மனைவியை சமூக சேவையில் ஈடுபட அனுமதியாதவன் மடையன். அதைப் பற்றி விவாதிக்க நான் விரும்பவில்லை. தன்னுடைய மனைவி தன் கண்ணெதிரே நடத்தை கெட்டவளாக, சமூகசேவையென்ற போர்வையிலே ஆடித் திரிவதைப் பார்த்துக்கொண்டிருப்பவன் புத்திசாலியா? அப்படித்தானே...!" நியாயவாதி போல அவளைப்பார்த்து சற்று மிடுக்குடன் கேட்டான் இளைஞன்.

அப்பெண் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள். அவளுடைய நண்பன் 'ஹோட்டல் பில்'லைச் செலுத்திவிட்டு அவளுடன் அவசரமாக வெளியேறிச் சென்று, காரில் ஏறிப் போய்விட்டான். இளைஞன் அவர்களிருவருக்கும் பிரியாவிடை அளித்துவிட்டு றெயில்வே ஸ்ரேஷனை நோக்கி நடந்தான்.

★

இளைஞனின் வார்த்தைகள் அப்பெண்மணியை உடனே தாக்கவில்லை. ஆனால் காரில் அமர்ந்து சிந்தித்தபோது அவளது எண்ணங்களை, பல தரப்பட்ட செயல்களை, தன்னுடைய கருத்துக்கு மாறுபட்ட வகையில் மற்றவர்கள் புரிந்து கொள்ளுகிறார்கள் என்பது அவளுக்குத் தெற்றெனத் தெரிந்தது.

## ஞாயிறு கதை மலர்


அழகிய பெனியன் காலுமேஸ் !!
"லேடன்"
தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன

LEYDEN

பல தினுசுகள்! பல அளவுகள்!! எங்கும்கிடைக்கும்
இன்றைய தேவை: சுதேசிப்பொருள் ஆதரவு
அதற்கு வழி 'லேடன்' பெனியன்கள்
காலுமேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு
பெனியன்களையும், காலுமேஸ்களையும் மிஞ்சியது
'லேடன்' பெனியன்களும், காலுமேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## முதுகுவலிக்கு புது மருந்து

முதுகு வலிக்கு முக்கிய காரணமாக இருக்கும் 'வழுகும் சில்லுகள்' என்பனவற்றைக் குறுக்கு எலும்பின் வழியே ஊசி மூலம் செலுத்தும் மருந்தினால் கரைத்து வருகிறார்கள்.

இந்த மருந்தானது அறுவை மருத்துவத்தையும் நீண்ட நாள் ஓய்வு கொள்வதையும் தவிர்க்கிறது என்று அமெரிக்க மருத்துவச் சங்க ஏடு கூறுகிறது.

இம்மருந்தின் பெயர் "சைப்யோப்பாயின்" என்று ஸ்மித் அறிவித்திருக்கிறார்.

# 'இரத்த தானம்'

மாலை நாலரை மணியானதும் சூரியனின் உக்கிரம் தணிய ஆரம்பித்தது. வழக்கம் போலவே நானும் வெளியே உலாவிவருவதற்குப் புறப்பட்டேன். ஒவ்வொருநாளும் மாலையில் காற்ருடப் பண்ணைவரை நடந்து போய்விட்டு வருவது வழக்கம். அன்றைக்கு நான் புறப்பட்டபோது, எனதுமாமா முறையான தம்பிப்பிள்ளையின் வீட்டுப்பக்கம் சென்றுவந்தாலென்ன என்ற எண்ணம் தலைதூக்கவே, அந்தப் பக்கமாக நடந்தேன். நான் அவர் வீடு சேரவும், அவர் எங்கோ புறப்படவும் சரியாயிருந்தது.

"என்ன மாமா, எந்தப்பக்கம் போகப்போகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"அட, தம்பியே ... ? வா ... வா ... சும்மாகடற்கரைப்பக்கம் வரை காத்தாடப் போய்வரலாமென்று பார்த்தேன். நீயும் வாவன்" என்ருர். அவரைத் தொடர்ந்து சென்றேன்.

மாமாவும் நானும் உலக விஷயங்களை எடுத்து அலசி, விமர்சனம் செய்தவாறே பண்ணைப்பாலம் வரை நடந்தோம். பின் எமது விவாதம் சமூக விஷயங்களில் திரும்பியது.

"மாமா, நேற்றைய பேப்பர் பாத்தியளோ? அதிலஏலுமான ஆக்கள் ரத்த தானம் செய்யச் சொல்லிப் போட்டிருக்கு. தியேட்டர் வழியேயும் குழந்தையின் படத்தைப் போட்டு 'ஒரு ரத்ததான தருமவான் என்ர உயிரைக் காத்தார்' எண்டு எழுதிக் காட்டினம். பார்த்தால் பெரியபரிதாபமாயிருக்கு." என்றேன்.

"ஓம். பாவங்கள் தான்" என்று ஆமோதித்தார் மாமா.

"அப்போ, நீங்களும் என் பக்கம் எண்டு சொல்லுங்கோ. நாளைக்கு நான் ஆஸ்பத்திரிக்குப் போறப்போ தியாகுவையும் என்னோடு அனுப்பப்போறியள்?" என்று நான் கூறியபோது மாமாவுக்கு ஒன்றும் புரியவில்லை. "நீ ஏன் ஆஸ்பத்திரிக்குப் போகவேணும்? தியாகுவை என்னத்துக்கு உன்னோடே அனுப்ப வேணும்?" என்று கேட்டார்.

"அதைத்தானே மாமா சொல்லவாறன். எனக்கும் தியாகுவுக்கும் இருபது வயசுக்கு மேலாகுது. கடவுளே எண்டு நாங்கள் ஒரு நோய் நொடியில்லாமல் இருக்கிறம். இப்ப எங்கட யாழ்ப்பாண ஆஸ்பத்திரி ரத்த சேமிப்பு நிலயத்தில் ரத்தமே இல்லையாம். நானும் அவனும் ஒரு பைந்து ரத்தம் குடுத்தா குறைஞ்சா போவம். அது பெரிய தருமம்" என்று நான் சொல்லிமுடிக்க முன்னமே மாமா விஸ்வரூபம் எடுத்துவிட்டார். "இஞ்சேர், நீ பெரிய தருமத்தக் கண்டனீ. இது கதவுள் குடுத்த ரத்தம். அடைவிணுக்க உனக்குஉரிமையில்லை. நீ ரத்தத்தைக் குடுத்துவிட்டு படுக்கையில் கிடக்காதே" என்று சத்தமிட்டார்.

"மாமா, இது பெரிய புண்ணியம். காசு செலவிட்டு கோலாகலமாக திருவிழாசெய்யிறதிலும் பாக்க ரத்தம் குடுத்து ஒரு உயிரைக் காப்பாத்திறதுமேல்" என்றேன்.

"நீ, வர வர மோசமாப் போனுய். நீ விருப்பமெண்டா போய் ரத்தம்குடு. ஆனு, என்ர மகனை இதுக்கெல்லாம் கூப்பிடாதே" என்று கூறிவிட்டு அவர் அவ்விடத்தை விட்டுநடந்தார். "மாமா, இதுபழங்காலம் இல்லை, புதியகாலம். காலத்துக்கு ஏற்பகருத்தைமாற்தவேணும். இனி இதை தருமமாகக் கொள்ளவேணும்" என்று நான் கூறினேன். அவர் கேட்டும் கேட்காதவர் மாதிரி நடந்துவிட்டார். "கடவுளே, நீ எல்லா உயிரிலும் இருக்கிறுய். ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்கு உதவி செய்யிறது, உனக்கே செய்கிற பெரியதொண்டு என்று இவர்களெல்லாம் எப்போதுதான் உணரப்போகிருர்கள்!" என்று நினைத்துக்கொண்டேன்.

அடுத்தநாள், நான் ஆஸ்பத்திரிக்குச்சென்று இரத்ததானம் செய்துவிட்டு அந்த உதவிக்காக அவர்கள் கொடுத்தபத்து ரூபாயையும் காசநோய் உதவி நிதிக்குக் கொடுத்துவிட்டுவந்தேன். வீட்டை அடைந்த எனக்கு ஒருமகிழ்வுதரும் செய்தி காத்திருந்தது. கொழும்பிலுள்ள ஒரு கம்பெனியார் என்னை வேலைக்குத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அடுத்த நாளே பயணமானேன்.

* * *

மூன்று மாதங்களின் பின்னர் திரும்பவும், சொர்க்க பூமியான எனது சொந்த ஊருக்குத் திரும்பிவந்தேன்.

**கா. யோககுமாரன்**

மத்தியானம் உத்தரதேவியில் வந்து, களையாறி உணவுண்ட பின்னர் எனது தாயார் ஒரு இடிபோலும் சேதியை வெளியிட்டார். எனது மாமாவின் மகன் தியாகு காரில் மோதுண்டு ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டிருக்கிருனும். "நான் இப்ப போயிட்டு வரட்டோ அம்மா?" என்று கேட்டேன். "இல்லை யோகு, கொஞ்சம் பொறுத்து நானும் வாறன், ரெண்டு பேருமாப் போகலாம். அஞ்சு மணிக்குத்தான் ஆசுப்பத்திரியில் விடுவார்கள்" என்று கூறினுர்.

மாலை நாலரை மணிக்கு நாங்கள் ஆஸ்பத்திரி வாயிலை அடைந்தபோது மாமா அங்கு நின்ருர். எங்களைக் கண்டதும் மோதிய கார்க்காரனைத் திட்டி ஒருகுரல் அழுது தீர்த்தார். "...அவன் பாவி தட்டினதாலே பிள்ளையின்ர தலைஉடைஞ்சு ரத்தமெல்லாம் வீதியில. டாக்குத்தர் அவனுக்கு ரத்தம் ஏத்த வேணுமாம். ஆசுப்பத்திரியில கொஞ்சந்தான் இருக்காம். ஒரு பாவியும் ரத்தம் தரமாட்டானும்.என்ரபிள்ளை... ஐயோ" என்று அழுதார். "பயப்படாதேங்கோ மாமா, நான் ரத்தம் குடுக்கிறன்" என்றேன். "கடவுள்தான் உன்னைக் கொழும்பிலே இருந்து இங்க அனுப்பிவைச்சிருக்கிருர். தம்பி நல்லாத்தேறி எழுந்ததும், நல்லூருக்கு காவடி எடுக்க வைக்கிறன். கந்தா நீதான் காப்பாற்ற வேணும்" என்று வேண்டிக் கொண்டார். "உண்மைதான் மாமா, நல்லூர்க்கந்தன்தான் எனக்கு நல்ல சந்தர்ப்பம் தந்திருக்கிருர்" என்று சொல்லிவிட்டு டாக்டரைச் சென்று சந்தித்தேன்.

எனது ரத்தமும், தியாகுவின் ரத்தமும் அதிருஷ்டவசமாக ஒரே "குரூப்"பை உடையதாயிருந்தன. ஏற்கனவே இருப்பில் இருந்த ரத்தமெல்லாம் அவனுக்கு ஏற்றியிருந்தார்கள். என்னிடமிருந்து சிறிது ரத்தம் எடுத்துக் கொண்டார்கள்.

* * *

ஆறுமாத காலத்தின் பின் மீண்டும் நான் யாழ்ப்பாணம் வந்ததினம் மாலை, நான் மாமாவின் வீட்டிற்குப்போனபோது அமோக வரவேற்பளிக்கப்பட்டது எனக்கு! தியாகு குனு குனு என்று காணப்பட்டான். மாமா எனக்கு அருகில் வந்தார். "தம்பி யோகு, தியாகுவைக் கொண்டு நல்லூரில் காவடி எடுத்துப்போட்டன். அடுத்த வேலையை நீதான் செய்துவைக்க வேணும்" என்ருர் மகிழ்வோடு.

"என்ன மாமா?" என்றேன்.

"தியாகுவைக் கூட்டிக் கொண்டு ஆசுப்பத்திரிக்குப் போ" என்ருர்.

(யாவும் கற்பனை)

ஞாயிறு கதை மலர்

## மாணிக்க வெண்ணிலா!

— செ. மகேந்திரன் —

கீறிநல் வட்டம்
நிறமதிற் தீட்டுவான்
கீறப் பதினைந்து
நாளோ? — அதைக்
கூறு படுத்தி
அழித்துக் கலைத்திடக்
கூடப் பதினைந்து
நாளோ?

★

திரும்பப் பலமுறை
தீட்டுவான் வானதில்
திரும்பத் திரும்ப
அழிப்பான் — தினம்
அரும்பும் வளரும்
கறைசிறி துண்டென
அழித்துத் திரும்ப
அமைப்பான்.

★

மாணிக்க வெண்ணில
வாக்கத் தினந்தினம்
மையைச் செலவிடும்
வீரன் — அவன்
காணுவனே கறை
யற்றநல் வெண்ணிலா?
கண்டு களிப்ப
தெந் நாளோ?

மோட்டோர் வண்டி உரிமையாளருக்கு ஒரு நற்செய்தி!

உங்கள் மோட்டோர் வண்டிகளுக்கு வரும் பிழைகளுக்கு குறைந்த செலவில், குறுகிய காலத்தில், நம்பிக்கையும் உத்தரவாதமும் தரக் கூடிய சிறந்த சேவைக்கும் வண்டிகள் விற்பனைக்கோ அல்லது வாங்கவோ வேண்டுமா?

இன்றே நாடுங்கள்

வின்ஸ்லோஸ்

ஓட்டோ மோபைல் என்ஜினியர்ஸ்

மின்சார நிலய வீதி, [போன்: 269] யாழ்ப்பாணம்.

WINSLOWS Automobile Engineers

Power House Road, Jaffna.

பொறியியல் தொழில் நுட்ப வல்லுனர்களின் மேற்பார்வையில் பயிற்றப்பட்ட திறமை வாய்ந்த உதவியாட்களின் உதவியுடன் சிறந்த சேவை செய்து வருகின்ருேம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிருேம்

# மண்மாயை

— பொ. சண்முகநாதன்

"ஏட மண்ணுய்ப் போவானே!" என்று அடுத்த வீட்டுப்பாட்டி யாரையோ மண் அள்ளி ஆகாயத்தில் எறிந்தபடி திட்டிக் கொண்டிருந்தாள்.

அவளது செயலையும் ஓலத்தையும் கண்ட எனது மனத்திரையில் மண்ணைப்பற்றிய சிந்தனை விரிந்தது.

**மண்ணுசை**

"மனிதன் கடைசியில் ஆறு அடி மண்ணுக்குள் தானே அடங்கி விடுகிருன். அதற்கு மேல் ஏன் இந்த மண் ஆசை?" என்று சிலர் வேதாந்தம்பேசுவதுண்டு. ஆனல் அப்படிப் பேசுபவர்கள் உள்ளிட்டு எல்லாருக்குமே இந்த மண்ணுசை இருக்கவே இருக்கிறது.

தங்கள் எல்லைக் கதியாலை காலத்துக்குக் காலம் சிறிது தள்ளி நடுவதும், அதற்காக பக்கத்து வீட்டுக்காரன் போர் தொடுப்பது அல்லது விதானையிடம் (இப்போதென்ருல் கிராமசேவகர்) ஓடுவதும் மண்ணுசையின்றி வேறென்னவாயிருக்க முடியும்?

பெற்ருேர்களுக்குப் பெண் குழந்தை பிறக்கப்பிறக்க வேறொருகவலையும் பிறந்துவிடுகிறது. அது தங்கள் மண்ணும் குட்டி போடாதா என்பதே! இந்த வாலிபர்கள் இருக்கிருர்களே, அவர்களுக்கு பெண்ணுசை மட்டுமல்ல மண்ணுசையும் இருக்கிறது. இதனுல் பெண்ணைப் பெற்றவர்கள் தங்கள் பெண்களை வாலிபர்களுக்குக் கட்டிக் கொடுக்கும்போது கூடவே மண்ணையுமல்லவா அவர்களுக்குக்கட்டிக்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இந்த மண்ணுசை மக்களுக்கு மட்டுமல்ல பெரிய பெரியஅரசுகளையும் ஆட்டிப்படைத்துவருகிறது. ஆங்கிலேயர் நம்மையெல்லாம் அடக்கி ஆண்டதற்கும், சீனு இந்தியாவுடன் பூச்சாண்டி விளையாடுவதற்கும் இந்த மண்ணுசைதான் காரணமாகும்.

**மண்ணும் வயிறும்!**

'பொன்னுன நேரத்தை மண்ணுக்காதே', 'மண்ணுகிப் போ', 'ஆறடிமண்போதும்' என்றெல்லாம் மண்ணின் பெருமை தெரியாது மண்ணைச்சிறுமைப் படுத்துகிருர்களே, அவர்களிடம் முடியுமானுல் முக்கியமான உணவுப்பொருட்கள் எல்லாம் மண்ணிலேதான் விளைகின்றன என்ற உண்மையை நினைப்பூட்டி வையுங்கள், அதன் பிறகு அப்படியெல்லாம் பேசமாட்டார்கள். பாவம். அவர்கள் ஒருநாள் உணவை ஒழியென்ருல் ஒழியாதவர்கள்!

**மண்ணும் கண்ணும்!**

மண்ணின் பெருமைபற்றி எவ்வளவுதான் எழுதினுலும் ஒரே ஒரு சிறுமண் கண்ணுக்குள்ளே போனுல் ஏற்படும் வேதனையையும் மறக்கமுடியவில்லை. பொல பொலவென்று கண்களால் நீர் பெருகும், கண்ணை உருட்டி ஒரே எரிச்சலாக இருக்கும், மண்மீது மட்டுமல்ல பக்கத்தே காணப்படும் உயிருள்ள, உயிரற்ற எல்லாவற்றிலுமே ஆத்திரம் ஆத்திரமாக வரும்.

ஏறக்குறைய இப்படியான உணர்ச்சிதான் உண்ணும்உணவில் மண் கலந்து விட்டாலும் ஏற்படும்.

**மண்வளம்**

மண்ணுசையால் ஏற்படும் சண்டைபற்றி முன்பு குறிப்பிட்டேன். இப்போது இலக்கிய வட்டத்தில் மண்வளம்குறித்து எழும் சச்சரவைப் பற்றிச் சொல்லப்போகிறேன்.

இடத்துக்கிடம் சாதாரண மக்கள்பேசும் கொச்சைமொழிகளை நாகரிகமாக 'மண்வளச் சொற்கள்' என்கிருர்கள். கதைகளில் இச்சொற்களைப்பாவிக்கலாமா, கூடாதா என்பதே சச்சரவுக்குக் காரணமாகும். சில எழுத்தாளர்கள் 'பாவிக்கலாம்' என்றும் சிலர் 'பாவிக்கக் கூடாது' என்றும், இன்னும் சிலர் 'கொஞ்சம் பாவிக்கலாம்' என்றும் பத்திரிகைகள் வாயிலாகவும் மேடைகள் வாயிலாகவும் போர் புரிகிருர்கள். இப்போர் மண்ணுடனே நின்றுவிடட்டும். கல்லெடுக்கும் போராக மாறக்கூடாது என்பதுதான் எமது கவலையெல்லாம்.

**மண்—நிறம்**

மண்ணைபற்றி எழுதிக் கொண்டிருக்கும்போது எனது நண்பரின் மண்—நிறம் பற்றிய ஆராய்ச்சியும் நினைவுக்கு வருகிறது.

பொலிஸ், இராணுவத்தினர் இரக்கம், தயவு, தாட்சண்யம் இன்றிக் கடமையாற்றுவதற்கும் பஸ் கண்டக்டர்மார்கள் முகத்தை 'உர்' என்று வைத்துக்கொண்டு வெடு வெடு என்று காணப்படுவதற்கும் காரணம் அவர்கள் அணியும் அந்த மண்நிற (காக்கி) உடைகளே என்பது அந்த நண்பரின் முடிவாம்.

**எதிர்காலக் கவலை!**

மண்ணையும் மக்களையும்எதிர்காலத்தையும் சேர்த்து எண்ணும்போது ஒரு பயங்கரமான கவலையும் தோன்றுகிறது. உலகில் மக்கள்தொகை நிமிடத்துக்கு நிமிடம் பெருகி வருவதையும், மண் குட்டி போடாமல் பிடித்து வைத்த பிள்ளையார்போல் அப்படியே இருப்பதையும் பார்க்கும் போது எதிர்காலத்தில் ஒரு மனிதன் ஒரு சதுரஅடி மண்ணில் வாழவேண்டிவரும்போல் இருக்கிறது.

இதற்கு மாற்றுவழி என்ன? ஒருவரை ஒருவர் மண்எண்ணெய் ஊற்றிக் கொளுத்துவதும் தனக்குத் தானே மண் எண்ணெய்ஊற்றிக்கொளுத்திக் கொள்வதும் சிறந்த ஒருவழி என்று நான் எண்ணுகிறேன்.

இப்படியே இந்த மண்ணைப் பற்றி எவ்வளவோ எழுதலாம். எழுதினுல் "யாரடா இவன் எங்கள் பொன்னுன நேரத்தை மண்ணுக்கிக் கொண்டு இருக்கிருன்? எட மண்ணுய்ப்போவானே!" என்று என்னைநோக்கி மண் அள்ளித் திட்டத் தொடங்கிவிடுவீர்கள். அதற்குமுன் இதோ கட்டுரைக்கு மங்களம் பாடிவிடுகிறேன்:

இக்கட்டுரையின் 'வாழ்வு' மாயமாகவும் மண்ணுகவும் போய்விடாமலிருக்கவேண்டும்.

## ஆயிரம் கோடி மக்களை அழிக்க வல்ல அணு ஆயுதங்கள்

உதயபூரில் நடைபெற்ற 42-வது பக்வாஷ்மகாநாட்டில் கலந்துகொண்ட சோவியத் விஞ்ஞானிகளில் ஒருவரான திரு தாலன்ஸ்கி பின்வருமாறு கூறினுர்:-

தற்காலத்தில் யுத்தமென்பது சர்வநாசமே ஆகும். இப்போது 6000 கோடி மெகாடன் அணு ஆயுதங்கள் இருப்பில் உள்ளன. இவை உலகில் உள்ள சனத்தொகையைப் போல் 4 மடங்கு மக்கள் கூட்டத்தை நாசமாக்கும் சக்தி படைத்தவை. புத்தி சுவாதீனமுள்ள எவனும் யுத்தத்தைப் பற்றி நினைக்கமாட்டான். அதனுல் தான் சோவியத்யூனியன் யுத்தமுகாமிலிருந்து சமாதான முகாமுக்குப் போயிருக்கிறது.

## பப்பாளி இலை சிகரெட்

உடலுக்கு ஊறு எதுவும் விளைவிக்காது எனக் கூறப்படும் சிகரெட்டு விரைவில் அமெரிக்காவில் விற்பனைக்கு வரவிருக்கிறது. இவை பப்பாளி இலையினுல் ஆனவை. ஆனுல் இவற்றின் விலை சாதாரண சிகரெட்டின் விலையைப் போலவே இருக்கும்.

# கலை அரங்கம்

## "பார் மகளே பார்"

பணம் அந்தஸ்து மதிப்பு இவைதான் உலகத்திலே பெரியவை. இவற்றைக் கொண்டுதான் மனிதனை அளக்கவேண்டும் என்ற தவறான கொள்கையில் திளைத்தவர் ஜமீன்தார். அவருக்கு இரு பெண் குழந்தைகள். அவற்றில் ஒன்றுதான் ஜமீன்தாருடையது, மற்றது நாட்டியக்காரி ஒருத்திக்கு பிறந்தது. தவிர்க்க முடியாத காரணங்களால் தனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன என்று அவரது மனைவி கூறுகிருள். அதனை நம்பிய ஜமீன்தாரும் தன்னிரு குழந்தைகளையும் கண்கள் போலக் காப்பாற்றிவருகிறார். ஒரு பெண்ணுக்கு நிச்சயதார்த்தம் ஏற்படுத்தும்போது எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்றினல், உண்மை வெளிப்படுகிறது. இதனல் அமைதியும் அன்பும் தாண்டவமாடிய குடும்பத்திலே துன்பச் சூறவளி வீசுகிறது. பொங்கும கடல் ஒருநாள் தணியத்தானே வேண்டும். முடிவிலே அன்பும் பண்பும் வெல்கிறது. ஜமீன்தாரது வெறிபிடித்த அந்தஸ்து போலி மதிப்பு ஆகியன அழிகின்றன.

ஜமீன்தாரின் வேடம்தாங்கி நடிக்கும் நடிகர் திலகம் அன்புத் தகப்பனுக நடித்து ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்கிறுர். இன்பத்துக்கும் துன்பத்துக்கும் துணையாக வல்ல துணைவியாக சௌகார்ஜானகி தோன்றுகிறுர். ஜமீன்தாரின் இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் நடிக்கிறுர்கள் விஜயகுமாரியும் முத்துராமனும் தோன்றி காதல்காட்சிகளை அளிக்கிறுர்கள். ரசிகர்களைச் சோகக்கும் ஆற்றங்கரைக்கும் அழைத்துச் செல்கிறுர்கள். எம். ஆர். ராதா புதுமையான வேடம்தாங்கிச் சாந்தமாக நடித்து ரசிகப்பெருமக்களின் பாராட்டுதலைப்பெறுகிருர்.

ஜமீன்தார் கோபம்கொண்டு வீட்டிலேயுள்ள அத்தனை பேரையும் வெறுத்து ஒன்றும் சாப்பிடாமல் அறையைப் பூட்டிக் கொண்டு உள்ளே இருக்கிருர். அப்போது அவரது மனைவியும், இரு புதல்விகளும் ஜமீன்தாரைச் சாப்பிடும்படி மனுறுடுகிறுர்கள். இக்கட்டம் பிரமாதமாக அமைந்திருக்கிறது. நட்டுவனுராக நடிக்கும் எம். ஆர். ராதா நட்டுவாங்கம் செய்ய அதற்கேற்ப விஜயகுமாரியும், புஷ்பலதாவும் அற்புதமாக நடனம் ஆடுகிறுர்கள். இக்காட்சி நிச்சயமாக ரசிகர் உள்ளங்களைப் பெரிதும் கவரும்.

ஏ. பீம்சிங் டைரக்‌ஷனில் உருவாகிய இப் படத்துக்கு மெல்லிசை மன்னர்களாகிய விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையமைத்துள்ளனர் பி. பி. ஸ்ரீநிவாசனும் சுசீலாவும் சேர்ந்துபாடிய "என்னைத் தொட்டுச் சென்றேன்", "மதுரா நகரில் தமிழ்ச்சங்கம்" ஆகிய இரு பாடல்களும் இனிமையாக அமைந்துள்ளன.

பொதுவாகச் சினிமாப் படங்கள் வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் அமையாமல் மக்களது உள்ளத்தைப் பண்படுத்தும் கருத்துக்களையும் போதித்தால் அவை பெரிதும் பாராட்டற்பாலவை. இப்பணியை இத் திரையோவியம் சிறந்தமுறையில் ஆற்றுகிறபடியால் சினிமா ரசிகர்களுக்கு நல்விருந்து அளிக்கும்.

— மு. சிவலிங்கம்

## ஒன்பது இரவுக்கதையில் சிவாஜி நடிக்கும் ஒன்பதுபாத்திரங்கள்

ஸ்ரீ விஜயலட்சுமி பிக்சர்சாரின் "நவராத்திரி"யில் நவபாவங்களை வெளிப்படுத்தும் ஒன்பது பாத்திரங்களில் நடித்துவருகிறுர் நடிகர்திலகம் சிவாஜிகணேசன். அற்புதம், பயம், கருணை, கோபம், சாந்தம், அருவருப்பு, சிங்காரம், வீரம், ஆனந்தம் ஆகிய நவரஸ பாவங்களை வெளிப்படுத்தும் நவ பாத்திரங்களான முறையே கோடீஸ்வரன், குடிகாரன், டாக்டர், கொலைகாரன், விவசாயி, தொழுநோயாளன், தெருக்கூத்து ராஜபார்ட், வேட்டைக்காரன், கல்லூரி மாணவன் ஆகியவர்களாக நடிக்கிருர் அவர்.

இந்த ஒன்பது பேர்களையும் நடிகையர் திலகம் சாவித்திரி சந்திக்கிருர். இந்த சந்திப்பை வைத்து கதை செல்கிறது. ஒன்பது இரவுகளில் நடக்கும் சம்பவங்களைச் சித்தரித்துச் செல்லும் இந்தப் புதுமைக் கதையையும் வசனத்தையும் ஏ. பி. நாகராஜன் எழுதியுள்ளார். அவரே தயாரித்து இயக்கும் இப்படத்திற்கான பாடல்களை கண்ணதாசனும் இசையை கே. வி. மகாதேவனும் அமைத்துள்ளனர்.

## 3 நாடகங்கள்

திருக்கோணமலை முத்தமிழ் சங்கத்தினர் நடத்திய முத்தமிழ் சங்கவிழாவில் மூன்றுநாளன்று நிகழ்ந்த நாடகவிழாவில் தா. சீ. வில்வராஜா குழுவினரின் "புதுவாத்தியார் பட்டபாடு" என்ற முழுநகைச்சுவை நாடகம் அரங்கேற்றப்பட்டது. ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இந்நாடகத்தைக் கண்டுகளித்தனர். இந்த நாடகத்தில் நாடக ஆசிரியர் திரு. சீ. வில்வராஜா புதுவாத்தியாரின் பாகம் ஏற்று நடித்தார். மாணவன் வல்லிபுரமாக பிரதமபாகம் ஏற்று நடித்த ஆ. அசனுரின் நடிப்பு சபையோரை வெகுவாகக் கவர்ந்தது.

மற்றும் கே. எஸ். ராஜா, பாலசிங்கம், எஸ். டி. சுந்தர் ஆகியோரும் பங்குபற்றி நடித்தனர். நாடகவிழாவில் நாவலர் நாடகமன்றத்தினர் அளித்த "சங்கிலியன்" என்ற வீரநாடகமும் அரங்கேற்றபட்டது. இந்நாடகம் நாவலர் நாடக மன்றத்தின் மூன்ருவதுபடைப்பாகும்.

மற்றும் இந்துக் கல்லூரி ரவீந்திரா நாடகமன்றத்தினரின் "கம்பனும் மன்னனும்" என்ற இசைநாடகமும் அரங்கேற்றப்பட்டது. இந்நாடகத்தில் பிரதம பாகமான கம்பனின் பாகத்தை ஏற்றுநடித்த செல்வன் த. சாம்பசிவத்தின் நடிப்பு பலரின் பாராட்டைப் பெற்றது.

## நகைச்சுவைநாடகம்

திருக்கோணமலை முற்போக்கு ஹாஸ்யகலாமன்றத்தின் ஆதரவில் "மாறுங்கன்னிச் சண்டியன் மாணிக்கம்" என்ற ஹாஸ்ய நாடகத்தை தயாரித்தளித்த திரு. ஆ. அசனுர் இன்னுமொரு முழுநீள நகைச்சுவை நாடகம் ஒன்றைத் தயாரித்துவருகின்ருர். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் கலைவிழாவில் இது அரங்கேற்றப்படும்.

## மணமகனுக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள். அவ்வளவுதான். அதன்பின்பு அதைப்பற்றி எந்தவிதமான பேச்சுவார்த்தையும் இருக்கமாட்டாது. அவரவர் வழக்கம்போல் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபடத் தொடங்கிவிடுவார்கள்.

இவர்களிடத்தில் விவாகரத்தோ, மனைவியைவிட்டுவிட்டுப் போவதோ, அல்லது மனைவி கணவனைவிட்டுவிட்டுப் போதலோ கிடையாது. உழைப்பு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி இருவரில் ஒருவர் இறக்கும்வரைக்கும் இருவரும் அன்பாகவே தான் வாழ்க்கை நடத்துவார்கள். கடுமையான சீதனக் கொடுமை தாண்டவமாடும் இந்நாட்டில் இப்படியான ஒரு சமூகம் இருக்கிறதென்ருல் அது வியப்புக்குரியதாகாதா? அத்தோடு விவாகரத்து மிகவும் உச்ச நிலையில் எமது நாட்டில் இருந்துவருவது தெரிந்ததே. இப்படியான ஒரு சமூகம் அதற்கும் சவால் விடுவது போல அமைகிறது.

அளிக்கம்பை என்னும் இடத்தில் சுமார் 200 வனக்குறவர் குடும்பங்கள் வரையில் வாழ்க்கை நடத்திக்கொண்டு வருகிருர்கள். அவர்கள் அடைந்துவரும் விழிப்புணர்ச்சியைக் கவனிக்கும் பட்சத்தில் இன்னும் இருவருட காலத்துக்குள் அளிக்கம்பை ஒரு புரட்சிகரமான வனக்குறவர்களின் குடியேற்றக் கிராமமாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்லோயா அபிவிருத்திச் சபை கல்லோயாப் பள்ளத்தாக்கில் வலதுபுறப்பிரதேசத்தை அபிவிருத்திசெய்து குடியேற்றவேலைகளை ஆரம்பிக்கும் போது அளிக்கம்பைப் பகுதியை வனக்குறவர்களுக்கான ஒரு கிராமம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்னேற்பாடாக இப்போதே கல்லோயா அபிவிருத்திச்சபையின் கிராம அபிவிருத்திப் பிரிவு அவர்களுக்கு குடிதண்ணீர் வசதிக்கு கிணறு அமைத்துக்கொடுத்து ஒரு கிராம முன்னேற்றச்சங்கத்தையும் அமைத்துள்ளது.

## வெள்ளவத்தையில் ஸ்ரீ தியாகராஜர் விழா

— "திரு" —

சென்ற வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயத்தில் இலங்கை தியாகராஜ கான சமாஜத்தினர் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்விழாவைசிறப்பாகக் கொண்டாடினர். விழாவிற்கு மூன்றுநாட்களும் பெருந்திரளான மக்கள் சமுகம்கொடுத்திருந்தனர். இவ்விழாவை, தொடர்ந்து ஆறுவருடகாலமாக இச்சமாஜம் நடாத்துவது பெருமைக்கும் போற்றுதற்குமுரிய விஷயமாகும். விழா நிகழ்ச்சிகள் குறிப்பிட்டநேரத்திற்குத் தொடங்கி முடிவடையவேண்டிய நேரத்திற்கு முடிந்தது இவ்விழாவின் மிகவும் சிறந்த ஒழுங்கமைப்பைத் தெளிவுறுத்தியது. நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட பிரகாரம் நிகழ்ச்சிகள் யாவும் ஒழுங்காகவும் ஒருவித மாறுதலுமின்றி நடந்தேறியது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

முதல்நாள்நிகழ்ச்சி திரு.கந்தசாமி சகோதரர்களின் நாதஸ்வரத்துடன் ஆரம்பமாகி திரு. ஏ. எஸ். நாராயணன் பாட்டுடன் முடிவடைந்தது. இவற்றுள் செல்வி மஞ்சுளா சத்தியவாகீஸ்வர ஐயருடைய பாட்டு ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டதென்றே கூறவேண்டும். ஒன்பது வயது நிரம்பிய செல்வன கண்ணனுடைய மிருதங்க ஆலாபனமும் முகபாவனையும் ரசிகப் பெருமக்களின் மனதைப் பெரிதும் ஈர்த்தது. அன்று தனது தலைமையுரையில் திரு. எஸ். கணேசராஜா பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இந்த உற்சவத்தை இந்த சமாஜத்தினர் ஆண்டுதோறும் செய்து வருகின்றனர். தியாகராஜ சுவாமிகள உற்சவத்தைக் கொண்டாடுவதனுல் கலைஞர்கள், தியாகராஜ சுவாமிகளுக்கு தங்கள் மரியாதையையும் அஞ்சலியையும் செலுத்துகின்றனர். தியாகராஜர் வாழ்ந்தகாலத்தில் அவர் சீரும் சிறப்புடனும் வாழாவிட்டாலும் கர்நாடக சங்கீதத்திற்கு அரும்பெரும் தொண்டு ஆற்றியுள்ளார். இதனை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. பலர் இப் பெரியாரை பாட்டுக்கள்மூலம் இராசாக்களைப்புகழ்ந்துபாடும்படி வேண்டியும் அவர் அதற்கு செவிசாய்க்காது இறைவனது புகழைப் பாடியே இயற்கையெய்தினர்.

இன்று சில சங்கங்கள் தோன்றுகின்றன. நாளை அநேகமானவை இறந்தும்விடுகின்றன. ஆனல் இலங்கை தியாகராஜகான சமாஜத்தினர் கடந்த பல ஆண்டுகளாக இந்த உற்சவத்தைக் கொண்டாடுவது நாம் பாராட்டுவதற்குரிய விஷயமாகும்"

இரண்டாவது நாள் நிகழ்சிகளில் ஈழநல்லூர் திரு. சு. சத்தியலிங்கத்தின் பாட்டும் திரு. ஏ. எஸ். நாராயணன் தயாரித்தளித்த வாத்தியக் கோஷ்டிகானம் திருமதி கமலா ஹரிஹரஐயர், திருமதி பகவதி, ரங்கராஜன் அவர்களினது பாட்டும் நாதஸ்வர இளவரசு திரு. என். கே. பத்மநாதனின் நாதஸ்வரமும் மிகவும் சிறந்த நிகழ்சிகளாக அமைந்திருந்தன. நாதஸ்வரக் கச்சேரி இறுதி நிகழ்ச்சியாகவிருந்த காரணத்தினல் குறிப்பிடப்பட்ட நேரத்தைத் தாண்டியும் ஜனக்கூட்டம் நிகழ்சிமுடிவடையும் வரை அகலவில்லை. மூன்ரும் நாள் காலை நிகழ்ச்சி ஆராதனையாகும். இந்த நிகழ்ச்சியில் சகல கலைஞர்களும் பங்குபற்றினர்கள் பெண்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டது ஒரு தனிச்சிறப்பாகவும் கண்கொள்ளாக் காட்சியாகவுமிருந்தது. அன்றுமாலை நடந்த நிகழ்ச்சிகளுள் சிறப்பான நிகழ்ச்சிகளாகக் கருதப்பட்டவை. திரு. சு கணபதிப்பிள்ளையின் பாட்டும் திரு. கே. கே அந்தோனியின் பாட்டும் திரு. பரம்தில்லைராஜாவின் பாட்டுமே. திரு. பரம் தில்லைராஜாவைத் தவிர்த்து மற்ற இருவருக்கும் கொடுக்கப்பட்ட நேரம் ஒரு மணித்தியாலமே. ரசிகப் பெருமக்கள், கொடுக்கப்பட்ட நேரம் கலைஞர்களுக்குப் போதாது என்று அபிப்பிராயம் தெரிவித்தனர். ஆகவே இனிமேல் நிகழ்ச்சிகள் தயாரிக்கும்பொழுது கலைஞர்களுக்கு ஏற்றவாறு நேரத்தை ஒதுக்குதல் ரசிகப் பெருமக்களைத் திருப்திப் படுத்துவதாகும்.

அடுத்த ஆண்டில் இருந்து இலங்கை தியாகராஜகான சமாஜத்தினர் தியாகராஜ உற்சவத்தை ஏழு நாட்களுக்குக் கொண்டாடத் தீர்மானித்துள்ளார்கள் என்ற கருத்தை விழாவின்போது தெரிவித்திருந்தார். இச் செய்தியை ரசிகப் பெருமக்கள் மிகவும் ஆதரவுடன் கரகோஷமிட்டு வரவேற்றனர். இவ்வாண்டு நிகழ்சிகளை ஒழுங்காகவும் முறையாகவும் செய்ய ஒத்தாசை புரிந்த இளம் இணைச்செயலாளருள் ஒருவரான் திரு. இர. சிறீநிவாசன் அடுத்த ஆண்டும் இது போன்று பேராதரவு கொடுத்து ரசிகர்களை மகிழ்விப்பார் என எண்ணுகின்ரேம்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிலி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி
முத்துராமன் — சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்!

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்

# வைத்தீசுவரன் கோவில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டியாரே இக் கைங்கரியத்தைத் தமது திரவியம் கொண்டுமுடித்தனர். இத்திருப்பணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய பிரபுக்களும் சிறிது பொருளும் பூசைக்கு விளைநிலங்களும் உதவினர்.

வைத்தியலிங்கச் செட்டியாரால் அமைக்கப்பட்ட சிவன் கோவிலிலே உலகமாதாவாகிய தையல்நாயகி அம்பாளோடு வைத்தீஸ்வரப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார்.

இக் கோவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கு அமையப்பெற்றது. இக் கோவில் திருக்கேணி ஒன்றுஉண்டு. இத்தலத்திற்கு தீர்த்தம் வண்மேற்கில் உள்ள வில்லூன்றி என்னும் சமுத்திர சங்கம தீர்த்தமாகும். இலங்கையின் ஏனைய பாகங்களிலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள சைவத்தலங்கள் எலலாம் இக்கோவிலைப் பின்பற்றி நித்திய நைமித்தியங்களை நடாத்தின.

இக்கோவிலில் தினந்தோறும் காலை 5-00 மணிக்கும் 8-00 மணிக்கும் பகல் 12-00 மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் 6-00 மணிக்கும் இரவு 7-00 மணிக்கும் பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளி, சனிக்கிழமைகளில் மட்டும் பகல் 12-30 மணிக்கும் பூசை நடைபெறுகிறது. மகோற்சவ காலங்களில் பின்வரும் நேரங்களில் காலை 7 மணி, 9 மணி, மாலை 4 மணி, 6 மணி, இரவு 7-30 மணி, 10 மணிக்குப் பூசைகள் நடைபெறுகின்றன.

இவ்வருடம் சிவன்கோவில் திருவிழாகொடியேற்றம் 9-3-64 ஆரம்பமாகி பதினெட்டு நாட்களாகத் திருவிழா நடைபெறும். தேர்த்திருவிழா 18-ம் நாள் 26-3-64ல் நடைபெறும். இக்கோவிலில் காணப்படும் வாகனங்கள், தமிழர்களின் கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகத்திகழ்கின்றன. இங்குள்ள வாகனங்கள் ஆட்டுக்கடா, இடபம், பூதம், யானை, அன்னம், நாகம், குதிரை முதலியன புஷ்பப் பல்லக்கும், மஞ்சமும் உண்டு. சிவன்கோவில் தேர்ச் சிறப்பு மரச்சித்திரக்கொத்து வேலைப்பாடுகளை உடையது.

வைத்தியலிங்கச் செட்டியார் தாமே சிவன்கோவிலை நடாத்தியபின்னர் தமது புத்திரர்களாகிய கோபாலச்செட்டியாரிடத்திலும் கந்தப்பச்செட்டியாரிடத்திலும் ஒப்புவித்து அவர் கருங்கல்லினால் ஒரு தொட்டி அமைப்பித்து அத்தொட்டியில் ஆரோகணித்துக் கங்கையில் இறங்கி இவ்வாறு அவர் சிவபதம் எய்தனர்.

இக்கோவில் தாபகராகிய வைத்தியலிங்கச் செட்டியாரே பண்ணை முற்றவெளியில் முத்துமாரியம்மன் கோவிலையும், வண்ணை கன்னார்திட்டி வீதியில் உள்ள காளிகோவிலையும் வண்ணை வடமேற்கில் உள்ள ஐயனார் கோவிலையும் அமைப்பித்தார். மேலும் வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு இடம் அளித்த தனிப் பெருமையும் கோவிலுக்கு உண்டு.

சிவன் கோவிலில் உள்ள ஸ்ரீ தட்சணாமூர்த்தி சந்நிதானத்தில் ஆறுமுகநாவலர் பெருமான் வீற்றிருந்து தியானம் செய்தனர். சிவன் கோவிலில் உள்ள மகாமண்டபத்திலே அவர் பன்முறை பல சிறந்த சைவசித்தாந்தப் பிரசாரங்களைச் செய்துள்ளார். கந்தபுராணத்திற்கு திறமான உரைகள் செய்தவர் நாவலர் ஐயாவின் தலைமயாணரின் மகன் பொன்னம்பலம்பிள்ளை அவர்கள் (பொன்னையா உபாத்தியாயர்) சிவன் கோவில் மண்டபத்திலே இப்பிரசங்கங்களைச் செய்தனர். பிற்காலத்தில் சச்சிதானந்த யோகீஸ்வரர் அவர்களும் சிறந்த காலட்சேபங்களை இம்மண்டபத்திலேயே செய்தார். "யாழ்ப்பாணத்துச் சமய நிலை" என்னும் நாவலர் பெருமானின் விக்கியாபனத்தை வாசித்தால் ஆங்கு சிவன் கோவிலைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம். நாவலர் பெருமான் சிவபதம் எய்துவதற்கு முன்னர் இக் கோவில் மண்டபத்திலே தமது கடைசிப் பிரசங்கத்தைச் செய்தார் என்று த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதிய ஆறுமுக நாவலர் வாழ்க்கைச் சரித்திரத்தில் இருந்து அறியக்கிடக்கின்றது.

வண்ணைச் சிவன் கோவில் அதிபர் திரு. கந்தப்பச்செட்டியாரை யான் சென்ற மாதம் விடுமுறையில் சந்தித்தேன். அப்பொழுது நான் ஏன் இச் சிவன் கோவிலுக்கு ஒரு தூபம் இல்லை என்று வினவினேன். தூபத்தைக் கருங்கல் திருப்பணியாக ஒரு கோபுரம், மண்டபம் முதலியனவற்றுடன் கட்டி முடிக்க இருப்பதாகவும், சிற்பிகளை (ஸ்தபதிகளை) அழைக்க ஏற்பட்ட "பாஸ்போட்" வில்லங்கங்களாலேயே தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறினார்.

இக்கோவிலில் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை செய்விக்க ஏற்பாடுகள் செய்வித்திருப்பதாகவும், அதற்கு வைத்தீஸ்வர வித்தியாசாலை உதவி ஆசிரியர் ஆறுமுகம் அவர்கள் பொறுப்பெடுத்து நடத்தி வருவதாகவும் அறிந்தேன்.

"மன்னுபுகழ் வயித்திலிங்
 கேசர் வாழி
மாது தையலம்மை
 யென்றும் மகிழ்ந்து வாழி
நன்னயஞ்சேர் திருவண்ணை
 நகரம் வாழி
நான் மறையோர் வாழி
 மனு நீதி வாழி
வன்னமுறு வைஸ்யகுல
 வைத்தியலிங்கன்
வமிசமுடன் சிவதரும
 முஞற்றி வாழி
அன்னகரி லிருக்கு மற்
 றெவரும் வாழி
அனந்த சுப்பையன்
 பாமாலை வாழி வாழி"

இது வண்ணை நகர் தையல் நாயகி கலிவெண்பாவின் கடைசிச் செய்யுள். இச் சிவன் கோவிலில் எழுந்தருளி இருக்கும் வைத்தீஸ்வரரைப் பற்றியும், தையல்நாயகி அம்மையாரைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறது. இதனைப் பாடியவர் வேலணையூர் பேரம்பலப் புலவர். இவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் பேரனா என்பது குறிப்பிடத்தக்கது.

கோவில் அதிபர் வரலாற்றை முதன் முதலாக யாழ்ப்பாணம் நாவலர் கோட்டத்து திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் 1912-ல் தமது யாழ்ப்பாணச்சரித்திரத்தில் எழுதி வெளியிட்டார்.

வண்ணைச் சிலேடை வெண்பாவின் கடைசி அதாவது 101-வது வெண்பா பின்வருமாறு முடிகிறது:-

வாழி திரு வண்ணை நகர்
மன்னவர் செங்கோன் முகில்
வாழி திரு நீறுகண்டி
 மன்னுஉற்சவம் - வாழியவே
தையல் வைத் தீசரு
 டன்னு லடியரெலாம்
வையகமே லோங்கி
 வளர்ந்து.



## வரி விளம்பரம்

### இம்பீரியல் ரொவ்பி

இம்பீரியல் ரொவ்பி (புள்டோ) என்ற முத்திரை பொறித்த ரொவ்பியையே கேட்டு வாங்குங்கள். இம்பீரியல் ரொவ்பி சுவை, மணம் எல்லாவற்றிலும் தனிச்சிறப்பு வாய்ந்தது. சுகாதார முறையில் சிறுவர்கள் உட்பட எல்லோரும் விரும்பும் வகையில் நவீன முறையில் தயாரிக்கப்பட்டது இம்பீரியல் ரொவ்பி! இம்பீரியல் ரொவ்பி, வி. றெஜினோல், இணுவில். 4

### வீடு வளவு விற்பனைக்கு

மல்லாகம் ஆராச்சீமாவில் நவீனமுறையில் கட்டப்பட்ட புதிய வீடும் கிணறும் 8 பரப்பு நிலத்தில் மின்வசதியுடன் விற்பனைக்கு உண்டு. இ. சோமசுந்தரம், ஆராச்சீமா, மல்லாகம் என்ற விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். 8

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநாதர், கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.



# யாழ்—திருமலை உதைபந்தாட்டம் இன்று நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணக் கோஷ்டிகளும் திருக்கோணமலைக் கோஷ்டிக்குமிடையே இன்று மாலை 4-15க்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெறும். இப்போட்டியின் இறுதியில் முடிவு எதுவும் காணு திருப்பின் ஆட்டம் தொடர்ந்து நடைபெறலாம்.

இரு கோஷ்டிகளுக்கிடையே இப் போட்டி நாலாவது தடவையாக நடைபெறுவது தெரிந்ததே. இரு கோஷ்டிகள் நாலாவதுமுறை போட்டியிடுவது இலங்கைச் சுற்றுப் போட்டியில் முதலாவது தடவையாகும்.

முன்பு நடைபெற்ற ஆட்டங்களின் விபரம் வருமாறு:

கடந்த நவம்பர் மாதம் 10-ம் திகதி நடைபெற்ற போட்டிகளில்; திருக்கோணமலை (2) யாழ்ப்பாணம் (0). நவம்பர் மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணம்(3) திருகோணமலை (1). இவ்விரு ஆட்டங்களிலும் கோல்கள் சமனாகவிருந்ததினால் 3-வது முறையின் ஆட்டம் திருக்கோணமலையில் ஜனவரி மாதம் 19-ம் திகதி நடைபெற்றபோது ஆட்டமுடிவில் இரு கோஷ்டிகளும் இரண்டு கோல்கள் போட்டன. 10 நிமிடங்களுக்கு ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றும் முடிவுகாண முடியாது போய்விட்டது. இன்று நடைபெறும் ஆட்டத்திலும் இரு கோஷ்டிகளும் விடுகொடாது ஆடுவார்களென நம்பப்படுகிறது.

# பீடித்தொழிலாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தரிசி திரு. பொ. சித்திக் தெரிவித்துள்ளார்.

'எந்தவித காரணமுமின்றி வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் ஒன்பது பேருக்கும் உடனடியாக மீண்டும் வேலை வழங்கவேண்டும். வேலைசெய்த தொழிலாளர்களின் பழைய நிலுவைப் பணத்தை தாமதமின்றி கொடுக்கவேண்டும். தொழிலாளர்கள் பாரபட்சமின்றி கண்ணியமான முறையில் நடத்தப்படவேண்டும்'என்று கோரி முல்லா பீடிக்கம்பெனியைச் சேர்ந்த 16 தொழிலாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

இது சம்பந்தமாக தொழில் அதிபர் கடந்தவெள்ளிக்கிழமை வேலைநிறுத்தம் செய்யும் தொலாளர்களின் பிரச்னை பற்றி ஆராய்ந்து நாளை இதுகுறித்து விசாரணை நடத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளார் என்று வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களின் உதவிக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

# கட்டைவேலி கிராம சபை தலைவர் தெரிவு

உடுப்பிட்டி, சனி

கட்டைவேலி கிராமச்சங்கத் தின் தலைவராக நீற்றுவான் வட்டாரத்தைச்சேர்ந்த திரு. இராமலிங்கம் சச்சிதானந்தம் மீண்டும் தெரிவுசெய்யப் பட்டுள்ளார். உபதலைவராக திரு. மு. வல்லிபுரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தலைவர் உபதலைவர் தேர்தல் இன்றுகாலை தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் வடபகுதி உள்ளூராட்சி சபை ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தெரிவு நடைபெற்றபொழுது திரு. சச்சிதானந்தத்தை ஆதரித்து 11 பேரும் அவரை எதிர்த்து போட்டியிட்ட திரு. கணபதிப்பிள்ளை வல்லிபுரத்தை ஆதரித்து 3 பேரும் வாக்களித்தனர். உபதலைவர் தெரிவின்போது தி. மு. வல்லிபுரத்தை ஆதரித்து 10 பேரும் திரு திருஞானசம்பந்தபிள்ளையை ஆதரித்து 3 பேரும் வாக்களித்தனர்.

புதிய தலைவர் நீற்றுவான் வட்டாரத்தில் போட்டியின்றி ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாம்ராஜ்ய கலைவிழாவில் இலங்கை பங்குபற்றும்

கொழும்பு, சனி

அடுத்தவருடம் லண்டனில் நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய கலைவிழாவில் பங்குபற்றுவதற்கு இலங்கையிலிருந்து கலைஞர்கள் அனுப்புவதாக பிரதமர் வாக்குறுதியளித்துள்ளதாக இங்கு வந்திருக்கும் சாம்ராஜ்ய கலைவிழா தலைவர் திரு. ஈ. என். ஹன்ரர் தெரிவித்தார். சாம்ராஜ்ய நாடுகளைக்கொண்ட கலைவிழா ஒன்று முதல் முறையாக அடுத்தவருடமே நடைபெறவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை செய்யும்பொருட்டு திரு ஹன்ரர் சாம்ராஜ்ய நாடுகளுக்கு விஜயம் செய்துவருகிறார். இவர் அடுத்த செவ்வாய்க் கிழமை இலங்கையைவிட்டு மலேசியாவுக்கு புறப்படுவார்.

# தற்கொலை

ஊர்காவற்றுறை, சனி

அனலைதீவைச் சேர்ந்த சண்முகம் இராமலிங்கம் (வயது 60) "நச்சு மருந்து" அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். புங்குடுதீவு மரண விசாரணை அதிகாரி திரு. மா. முருகேசு விசாரணை நடத்தினர். விசாரணையின் பின் தற்கொலையென தீர்ப்பளிக்கப்பட்டது.

வாரம் 'ஈழநாடு'விஷேச செய்தி வெளியிட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

# பெட்ரோலியம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒருவார காலத்துக்குள் தற்போதைய பெட்ரோலியம் கார்ப்பரேஷன் சபை ராஜினமாச் செய்யும்என கட்டந்த

# ஈழ-சீன பிரதமர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நலை மீண்டும் ஏற்படுத்த மற்றும் கொழும்பு மகாநாட்டு நாடுகளுடன் சேர்ந்து இலங்கை தொடர்ந்து பணியாற்றவிருப்பதாக திருமதி சிறிமா தெரிவித்தார்.

## ஆசிய-ஆபிரிக்க மகாநாடு

1955ம் ஆண்டில் பாண்டுங்கில் நடைபெற்ற ஆசிய ஆபிரிக்க மகாநாட்டுக்குப் பின்னர் 30க்கும் மேற்பட்ட ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரமடைந்துள்ளதாகவும், இதனால் ஆசிய, ஆபிரிக்க கூட்டுறவு அபிவிருத்தியடைந்துள்ளதாகவும் இரு பிரதமர்களும் தெரிவித்துள்ளனர். இரண்டாவது ஆசிய - ஆபிரிக்க மகாநாட்டை நடத்த இது தக்க சமயம் என்றும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் எனவும் திரு. சூ தெரிவித்தார். அவ்வித மகாநாடு நல்ல பயன் தருமெனவும், அதில் இலங்கை பங்குபற்றும் எனவும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

## மண்டலசார்பற்ற மகாநாடு

இரண்டாவது மண்டலசார்பற்ற மகாநாடும், ஆசிய ஆபிரிக்க மகாநாடும் ஒன்றுக்கொன்று விசேஷமானவையல்ல என இரு பிரதமர்களும் தெரிவித்தனர்.

இரண்டாவது மண்டலசார்பற்ற மகாநாட்டை கூட்டுவதில் இலங்கை எடுத்துவரும் விசேஷ அக்கறைபற்றி இலங்கைப் பிரதமர் திரு. சூ என்-லாய்க்கு விளக்கிக் கூறினர். ஏகாதிபத்தியத்தையும், காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்து, தேசிய சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு 2வது மண்டல சார்பற்ற மகாநாடு உதவும் என இரு பிரதமர்களும் தெரிவித்தனர்.

## அணு ஆயுத தடை

உலகின் பல பாகங்களிலும் அணு ஆயுத சூன்ய பிராந்தியங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும், அணு ஆயுத வல்லரசுகள் இவற்றுக்குள் பிரவேசிக்குமுன்னர் முன் உத்தரவு பெறவேண்டுமெனவும் இரு பிரதமர்களும் ஒப்புக்கொண்டனர். அணு ஆயுதம் தாங்கிவரும் விமானங்களையும் கப்பல்களையும் இலங்கை எல்லைக்குள் பிரவேசிக்க அனுமதி மறுத்தது குறித்து இலங்கைப் பிரதமரை திரு. சூ-என்-லாய் பாராட்டினர். இதர நாடுகளின் உதவியோடு அணு ஆயுத தடையைமுற்றாக அமுல் செய்ய தொடர்ந்து முயற்சி செய்வதெனவும் தெரிவிக்கப்பட்டது.

## நிபந்தனையற்ற உதவி

புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுக்கு பொருளாதார உதவியளித்து அவற்றின் சுதந்திரத்தை ஸ்திரப்படுத்த நிபந்தனையற்ற உதவிசெய்ய வேண்டுமெனவும் கருத்து தெரிவிக்கப்பட்டது. உள் நாட்டு பிரச்னைகளில் தலையிடாமல் இந்த நாடுகளுக்கு சமத்துவ நிலையில் அந்த உதவி அளிக்கப்படவேண்டும் எனவும் அதன் மூலம் உலக சமாதானத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

## சீனவுக்கு ஐ. நா. வில் அங்கத்துவம்

சீனவுக்கு ஐ நா. சபையில் அங்கத்துவம் பெற இலங்கை மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கும் எனவும் திருமதி பண்டாரநாயக்கா வாக்குறுதியளித்தார். தைவான், சீனவின் ஒரு பகுதி என்பதை இலங்கை ஏற்றுக் கொண்டிருப்பதாக இலங்கைப் பிரதமர் தெரிவிக்க, சீனப்பிரதமர் இது திருப்திகரமானதென பாராட்டு தெரிவித்தார்.

## சீன-இலங்கை நட்புறவு

சீனவுக்கும் இலங்கைக்குமிடையே கடந்த பத்துவருடங்களாக ஏற்பட்டுள்ள வர்த்தக தொடர்புகுறித்தும், இரு நாட்டு மக்களிடையே நிலவி வரும் நல்லெண்ணம் குறித்தும் இரு பிரதமர்களும் பரஸ்பரம் பாராட்டு தெரிவித்துக் கொண்டனர். இருநாடுகளுக்கிடையிலும் வர்த்தக தொடர்பையும், ஒற்றுமையையும், பரஸ்பர நல்லெண்ணத்தையும் மேற்கொண்டும் பலப்படுத்த சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.